REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/Thinakaran.lk /ThinakaranLK

2023 டிசம்பர் 14 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 296 | Thursday 14, December, 2023 | 16 பக்கங்கள் | 50/-





# நாட்டைக் கட்டியெழுப்ப அரசுக்கு வேறு வழியில்லை

## IMF இன், இரண்டாம் கட்ட நிதிக்கு அனுமதி கிடைத்தது



**பாராளுமன்றில் ஜனாதிபதி ரணில் விசேட உரை**

**லோரன்ஸ்செல்வநாயகம்**

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவது மற்றும் கடன் மறுசீரமைப்பு இல்லாமல் போனால் நாடு மீண்டும் வீழ்ச்சியடையும் என ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். சபையில் உரையாற்றிய ஜனாதிபதி:

பல அரசியல்வாதிகள் அதிகாரத்தைப் பெறுவதற்காக மக்கள் மத்தியில் உருவாக்கும் கற்பனைக் கதைகள் குறித்து மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தைத் தவிர வேறு வழியில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் உதவி மற்றும் கடன் மறுசீரமைப்பை இல்லாதொழித்தால் முழு நாடும் மீண்டும் வீழ்ச்சியடையும்.

அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பல அரசியல்வாதிகள் மக்கள் மத்தியில் உருவாக்கும் கற்பனைக் கதைகள் 06

# 2024 பட்ஜட்டின் மூன்றாவது வாசிப்பு; 41 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது

## ஆதரவாக 122 எதிராக 81 வாக்குகள் மட்டுமே

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பட்ஜட் 2024 ஆம் ஆண்டுக்கான மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நேற்று (13) பாராளுமன்றத்தில் இடம்பெற்றது.

பாராளுமன்றத்திற்குள் பிரவேசிப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருந்த இராஜாங்க அமைச்சர் டயனா கமகே, பாராளுமன்ற உறுப்பினர்களான சுஜித் சஞ்சய பெரேரா மற்றும் ரோஹன பண்டார ஆகியோருக்கும் இன்றைய தினம் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இதன்போது பாதீட்டின் மூன்றாவது வாசிப்புக்கு ஆதரவாக 122 வாக்குகளும் எதிராக 81 வாக்குகளும் வழங்கப்பட்டன. 06

# இரண்டாம் தவணை கடனுக்கு நாணய நிதியம் இணக்கம்



## 337 மில்லியன் டொலர் கிடைக்க வாய்ப்பு

இலங்கைக்கான 48 மாத கால விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் முதலாவது மதிப்பாய்வுக்கு, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை அனுமதி வழங்கியுள்ளது. இது, இரண்டாம் தவணைக் கடனாக சுமார் 337 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு கிடைப்பதற்கு வழி வகுத்துள்ளது. இந்தக்கடனுதவியை வழங்குவதற்கு கடந்த மார்ச் 20 இல், சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை ஒப்புதல் 06

# மின் கட்டணங்கள் ஜனவரி நடுப்பகுதியில் திருத்தப்படும்



## போதியளவு மழைவீழ்ச்சி கிடைத்ததால் பலன்

மின்கட்டணங்கள் அடுத்த வருடம்" ஜனவரி மாத நடுப்பகுதியில் மீண்டும் திருத்தப்படும் என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்: நாட்டில், கடந்த ஆண்டு போதிய அளவு மழை வீழ்ச்சி காணப்படவில்லை. இவ்வருடம் மழைவீழ்ச்சியின் அளவு அதிகரித்துள்ளது. இதனால், நீர் மின்சாரத்தை அதிகளவில் பயன்படுத்தக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. 06

# இலாபமீட்டும் நிறுவனமாக 2024 இல் இ.போ.ச மாற்றப்படும்



இலங்கை போக்குவரத்துச் சபையின் விளையாட்டு நிர்வாக சபை நடத்தும் (2023) வர்ணம் வழங்கும் விழா, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் நடைபெற்றது.

தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் இலங்கை போக்குவரத்து சபைக்கு வெற்றிகளைப் பெற்றுக்கொடுத்த 165 வீரர்களுக்கு இதன்போது 06

# கடற்றொழில், நீரியல் துறைக்கு திருத்தப்பட்ட புதிய சட்ட மூலம்



## வரைபு தற்போது துறைசார் நிபுணர்களிடம்

கடற்றொழில் வளத்துறைக்கான திருத்தப்பட்ட புதிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், இதற்கான வரைவு தற்போது துறைசார் நிபுணர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலே அவர் இதனைத் தெரிவித்தார். 06

## கலபொட ஞானிஸ்ஸர தேரரின் 80 ஆவது பிறந்த தினம்



புத்தசாசனத்துக்கு முன்னுதாரணமான சேவைகளாற்றிய கொழும்பு, ஹுனுப்பிட்டிய கங்காராம விஹாரையின் விஹாராதிபதி நவ கோறளையின் பிரதம சங்கநாயக்க கலபொட ஞானிஸ்ஸர தேரரின் 80 ஆவது பிறந்த தினம் (14) இன்றாகும். ஹுனுப்பிட்டிய கங்காராம விகாரையின் கலாநிதி கிரிந்தே அஸ்ஸாஜி தேரர், இவரது பிறந்த நாளை முன்னிட்டு தொடர் புண்ணிய நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளார். தற்போது சுகவீனமடைந்துள்ள ஞானிஸ்ஸர 06

## வாழ்நாள் சாதனையாளர் ஐவருக்கு கௌரவம்



ஊடகவியலாளர்களுக்கான சிறப்பு விருது வழங்கல் விழா கடந்த 12ஆம் திகதி கல்கிஸை ஹோட்டலில் மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெற்றது. இவ்விழாவில் பத்திரிகைத்துறையில் நீண்டகாலமாக சேவையாற்றி வரும் ஊடகவியலாளர்கள் 5 பேருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் வழங்கப்பட்டன. ஸ்டான்லி சமரசிங்க, எப்.எல்.டீ.மஹிந்தபால, சீதா றஞ்சனி, எஸ்.தில்லைநாதன் மற்றும் ஏ.எல்.எம். நிலாம் ஆகியோர் வாழ்நாள் சாதனையாளர் விருதை பெற்றுக்கொண்டனர்.

## இறக்குமதியான 06 மில்லியன் முட்டைகள் சந்தையில் விற்பனை



இறக்குமதி செய்யப்பட்ட 06 மில்லியன் முட்டைகள் மக்கள் பாவனைக்கு நேற்றும் (13) இன்றும் (14) சந்தையில் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை அரச வர்த்தக இதர சட்டபூர்வ கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

சந்தையில் முட்டையின் விலை 60 ரூபாவுக்கும் அதிகமாக உயர்ந்துள்ளதாக நுகர்வோர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். 06

### பத்திரிகையாளர் விருது வழங்கும் விழா 2022

## வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற நிலாம், தில்லைக்கு பாராட்டு



**தினகரன் ஆசிரியர் பீடத்தில் கௌரவம்**

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும், இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து நேற்றுமுன்தினம் கல்கிசை மவுண்ட் லவினியா ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர்களுக்கான அதியுயர் விருது வழங்கும் விழாவில், வாழ்நாள் சாதனையாளர் உயர்விருது பெற்றுக் கொண்ட தினகரனின் மூத்த ஊடகவியலாளர்களான எம்.ஏ.எம். நிலாம், கரவெட்டி எஸ். தில்லைநாதன் ஆகிய இருவரும் நேற்று தினகரன் ஆசிரியபீடத்தில் வைத்து கௌரவிக்கப்பட்டனர். தினகரன் பத்திரிகைக்கு 06

# கடத்தப்படவிருந்த வலி மாத்திரைகள்

## நடுக்கடலில் காவல்துறையினரால் பறிமுதல்



நாட்டுக்குள் கொண்டுவரப்படவிருந்த சுமார் ஒரு இலட்சம் வலி மாத்திரைகளை நடுக்கடலில் வைத்து இந்திய கடலோர காவல் படையினர் பறிமுதல் செய்தனர். 06

# புலமைப்பரிசில் பரீட்சையை இலகுபடுத்தும் திட்டம் விரைவில்

## எழுத்தறிவு, எண்ணியல் திறன்களை அளவிட முன்னுரிமை



தற்போதுள்ள கல்வி முறையில் பல முக்கிய மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். இந்த மாற்றங்கள் எதிர்வரும் புத்தாண்டிலிருந்து மேற்கொள்ளப்படும். இதன்பிரகாரம் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையை 06

# போதகர் ஜெரோமிற்கு விளக்கமறியல் நீடிப்பு

## டிசம்பர் 27 வரை மறியல்



மதங்கள் குறித்து சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டதால் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மதப்போதகர் ஜெரோம் பெர்னாண்டோவின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. இம்மாதம் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் 06

# கந்தக்காடு கைதிகள் தப்பிச்சென்ற சம்பவத்தை ஆராய ஐவரடங்கிய குழு



வெலிகந்த கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் தப்பிச்சென்ற சம்பவம் தொடர்பில் ஆராய, ஐவரடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளதாக, புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்தார். இது தொடர்பில் மூன்று நாட்களுக்குள் விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் 06



# நகர்வலம்



அநுராதபுரம், களுத்துறை மாவட்டங்களில்

## பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதை மாத்திரை பாவனை அதிகரிப்பு

பெற்றோர் விழிப்புடன் இருக்குமாறும் கோரிக்கை

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் மற்றும் களுத்துறை மாவட்டங்களில் உள்ள மாணவர்களிடம் போதை மாத்திரைகள் பாவனை அதிகரித்துள்ளதாக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. அநுராதபுரம் இராணுவ விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது ஆயிரத்திற்கும் அதிகமான போதை மாத்திரைகளுடன் அநுராதபுரத்தில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



இத்தகைய போதை மாத்திரைகளை பெற்றுக் கொள்ள தேவைப்படுகின்ற பணத்திற்காக சில மாணவிகள் பாலியல் ரீதியிலான தொழிலில் ஈடுபட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

களுத்துறை மாவட்டத்திலும் மாணவர்களிடம் போதை மாத்திரைகள் பாவனை அதிகரித்துள்ளதாகவும் அதிபர்கள் அவர்களிடம் தெரிவித்ததாகவும் இலங்கை ஆசிரியர் சங்கம் அநுராதபுரத்தில் கடந்த (10) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாந்து தெரிவித்தார். மாணவர்கள் தொடர்பில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்பதே சகலரினதும் எதிர்பார்ப்பாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருடன் எகிப்திய தூதுவர் சந்திப்பு



இலங்கைக்கான எகிப்து அரபுக் குடியரசின் தூதுவர் மாஜித் மோஸ்லே பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோனை நேற்று ( 13) கொழும்பில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்தார்.

இச்சந்திப்பின் போது இராஜாங்க அமைச்சர் எகிப்திய தூதுவருடன் சுமுகமான கலந்துரையாடலை நடத்தினார்.

இந்த உரையாடலின் போது, பாதுகாப்பு, மற்றும் மூலோபாய கூட்டாண்மை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்த கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். தூதுவர் மொஸ்லே, இரு நாடுகளுக்கும் இடையில் நீண்டகால உறவுகளைப் பேணுவதில் இலங்கையின் முயற்சிகளைப் பாராட்டினார்.

எகிப்திய தூதுவர் மற்றும் இராஜாங்க அமைச்சருக்கு இடையிலான இந்தச் சந்திப்பு, இருதரப்பு உறவுகள் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான அவர்களின் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

## நத்தார் தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற சிறப்பு நிகழ்வு



நத்தார் தினத்தை முன்னிட்டு கொழும்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கிறிஸ்தவ மதப் போதகர்களுக்கு ஜனனம் அறக்கட்டளையின் ஸ்தாபகத் தலைவர் கலாநிதி விநாயகமூர்த்தி ஜனகனின் ஆலோசனைக்கு அமைவாக அருட் கலாநிதி வணபிதா சந்ரு பெர்னாண்டோ தலைமையில் அன்பளிப்பு வவுச்சர்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு கொழும்பு, மட்டக்குளியில் உள்ள கெத்சமனே கொஸ்பல் சபையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வின் போது ஜனனம் அறக்கட்டளையின் பணிப்பாளரும் அகில இலங்கை கிறிஸ்தவ ஒன்றியத்தின் தலைவர் அருட் கலாநிதி வணபிதா சந்ரு பெர்னாண்டோ சிறப்பு அதிதியாக கலந்துகொண்டு வருகை தந்திருந்த கிறிஸ்தவ மதப் போதகர்களுக்குஅன்பளிப்பு வவுச்சர்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

## எம்.எச்.எம். அஷ்ரபின் 75ஆவது பிறந்த தினம்











ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய ஐக்கிய காங்கிரஸ் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரபின் 75 ஆவது பிறந்த தினத்தை நினைவு கூரும் விசேட நிகழ்வுவொன்று கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் மறைந்த அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரபின் பாரியார் பேரியல் அஷ்ரப், அவரது மகன் அமான் அஷ்ரப், முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய மற்றும் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் அஸாத் சாலி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.
படம்: அஷ்ரப் ஏ சமத்

தரம் 05;

## சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி சிறந்த பெறுபேறு



பஹாமா பஹ்மி கரீம்



ஆமிரா பர்வத்



ஹப்ஸா நளீம்



இஸ்மா இன்திகாப்



கதீஜா நௌபர்



ஸாரா சைனப் ரம்ஸான்

அண்மையில் வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரியிலிருந்து பரீட்சைக்குத்தோற்றிய மாணவிகளுள் பஹாமா பஹ்மி கரீம் (174), ஆமிரா பர்வத் (163), ஹப்ஸா நளீம் (158), இஸ்மா இன்திகாப் (156), கதீஜா நௌபர் (154), ஸாரா சைனப் ரம்ஸான் (147) புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.
மேற்படி மாணவிகள் பரீட்சையில் சித்தியடைய இரவு பகலாக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய ஆசிரியர், ஆசிரியைகளுக்கு பாடசாலை சமூகம் பாராட்டு தெரிவித்துள்ளதோடு சித்தியடைந்த மாணவிகளையும் பாடசாலை சமூகம் பாராட்டியுள்ளது.



சிலாபம் கல்வி வலயப் பிரிவிலுள்ள கொட்டராமுல்ல அல் ஹிரா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் சிறுவர் சந்தை நேற்று ( 13 ) புதன்கிழமை முற்பகல் வேளையில் நடைபெற்றது. குறித்த பாடசாலையின் தரம் 1 முதல் தரம் 5 வரையான வகுப்புக்களின் மாணவர்கள் ஏற்பாடு செய்த சிறுவர் சந்தையில் பிரதேசவாசிகள் பொருட்களைக் கொள்முதல் செய்து கொண்டிருப்பதைக் காணலாம். அல் ஹிரா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் சப்ராஸ் மொகமட் தலைமையில் மேற்படி சந்தை வியாபாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
( படம் ; நீர்கொழும்பு தினகரன் நிருபர் )

சிறுமிக்கு சூடுவைத்த சம்பவம்;

## சிறுமியின் தந்தை பொலிஸாரால் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

பொலன்னறுவ தியபெதும பகுதியிலுள்ள மூன்று வயது மதிக்கத்தக்க சிறுமியொருவருக்கு இடது கையில் சூடு வைத்து காயப்படுத்திய சம்பவம் தொடர்பில் சிறுமியின் தந்தையை தியபெதும பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக தியபெதும பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய் செய்த முறைப்பாட்டினை அடுத்தே சிறுமியின் தந்தையை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர் பொலன்னறுவ தியபெதும பகுதியை வசிப்பிடமாக கொண்ட 24 வயதுடையவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை தியபெதும பகுதியிலுள்ள சிறுமியின் வீட்டில் இடம்பெற்றுள்ளமை ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து மேலும் தெரியவந்துள்ளது. சூட்டுக்காயங்களால் பாதிக்கப்பட்ட சிறுமி தற்சமயம் பொலன்னறுவ பெரியாஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தியபெதும பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வெலிகமயில் பள்ளிவாசல் நிர்வாகிகளுக்கு தெளிவூட்டும் நிகழ்வு



(வெலிகம தினகரன் நிருபர்)

வெலிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சகல பள்ளிவாசல்களின் மௌலவிமார்கள் மற்றும் நம்பிக்கையாளர்கள் ஆகியோருக்கு தெளிவூட்டும் வேலைத்திட்டமொன்று வெலிகம பொலிஸ் நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இத் தெளிவூட்டும் அமர்வு நேற்று முன்தினம் (12) செவ்வாய்க் கிழமை பிற்பகல் வெலிகம முஹியத்தீன் பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது.

வெலிகம பொலிஸ் நிலைய பிரஜா பொலிஸ் அதிகாரி திரு. மாரசிங்க தலைமையில் இடம்பெற்ற இவ் வழிகாட்டல் வேலைத்திட்டத்தில் 24 பள்ளிவாசல்களின் மௌலவிமார்கள் மற்றும் நம்பிக்கையாளர்கள்கலந்து கொண்டனர்.



அருள்வாக்கி அப்துல் காதிர் கலை இலக்கிய கழகம் தெல்தோட்டை ஊடக மன்றதுடன் இணைந்து ஏற்பாடு செய்த அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவுப் பேருரை அண்மையில் கொழும்பு 09, தெமடகொட YMMA பேரவை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன் போது திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூபிடமிருந்த கலா பூசணம் மலாய்க்கவி டிவங்சோ நினைவு விருதையும் சான்றிதழையும் பெற்ற போது எடுத்த படம்.
படம் : அஷ்ரப் ஏ. சமத்

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 டிசம்பர் 14 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்




**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் - | 04.51 |
| ளுஹர் - | 12.06 |
| அஸர் - | 03.28 |
| மஃரிப் - | 05.57 |
| இஷா - | 07.12 |

**இன்றைய சுபதினம்**

சோபகிருது வருடம் கார்த்திகை 28

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி





இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும், இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து நேற்றுமுன்தினம் கல்கிசை மவுண்ட் லவினியா ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர்களுக்கான அதியுயர் விருது வழங்கும் விழாவில் தினகரனின் மூத்த ஊடகவியலாளர்களான எம்.ஏ.எம். நிலாம், கரவெட்டி எஸ். தில்லைநாதன் ஆகிய இருவரும் வாழ்நாள் சாதனையாளர் அதியுயர் விருதும், பி. பாலசிங்கம் விசேட கௌரவமும் பெற்றுக் கொண்டதை படத்தில் காணலாம். எம்.ஏ.எம். நிலாம், எஸ். தில்லைநாதன் ஆகியோருக்கான விருதை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பொருளாளரும், வீரகேசரி மற்றும் வீரகேசரி வார இதழ் பிரதம ஆசிரியருமான எஸ். ஸ்ரீகஜன் வழங்குவதையும், மூத்த ஊடகவியலாளர் பாலசிங்கத்துக்கான விருதை Sri Lanka news papers society மற்றும் விஜய நியூஸ் பேப்பர் நிறுவனத்தின் தலைவரான ரஞ்சித் விஜயவர்த்தன வழங்குவதையும் காணலாம்.

# இலங்கை–எகிப்து பாராளுமன்ற சங்கச் செயலாளராக பிரதி சபாநாயகர்



பாராளுமன்ற பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ இலங்கை, எகிப்து பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நட்புறவுச் சங்கம் அண்மையில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷவை பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மில் முன்மொழிந்தார்.

இதனை பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே உறுதி செய்தார். இலங்கை-எகிப்து பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் தலைவராக பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவு செய்யப்பட்டார். இந்த சங்கத்தின் உப தலைவர்களாக பாராளுமன்ற உறுப்பினர்கள் அரவிந்தகுமார், ஹெக்டர் அப்புஹாமி. மதுர விதானகே ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

துணைச் செயலாளராக பாராளுமன்ற உறுப்பினர் கருணாதாச கொடித்துவக்கும் பொருளாளராக பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மிலும் நியமிக்கப்பட்டனர்.

இலங்கை எகிப்து பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் செயற்குழுவிற்கு நியமிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் விபரம்.

பிரதி செயற் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன், இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத், திலான் பெரேரா, ஏ.எச்.எம். ஃபௌசி, ரவூப் ஹக்கீம், குமாரசிறி ரத்நாயக்க, மஞ்சுளா திஸாநாயக்க, வேலு குமார், யாதாமினி குணவர்தன, குணதிலக ராஜபக்ஷ, ராமேஸ்வரன் ராஜேந்திரன், ஜகத் குமார சுமித்ரா ஆராச்சி, உதயண கிரிந்திகொட, வைத்தியர் திலக் ராஜபக்ஷ, நாலக பண்டார கோட்டேகொட, வருண லியனகே, மேஜர் சுதர்சன தெனிபிட்டிய, வீரசுமண வீரசிங்க, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், ஏ. அடைக்கலநாதன், மஞ்சு லலித் வர்ண குமார, ஜயந்த வீரசிங்க.

இலங்கைக்கும் எகிப்துக்கும் இடையிலான உறவுகள் கடந்த காலம் தொட்டு காணப்படுவதாகவும், 66 வருட இராஜதந்திர உறவுகள் கடந்துள்ள இவ்வேளையில், தாம் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டதில் மகிழ்ச்சியடைவதாகவும் பாராளுமன்ற பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

# தெற்கு நெடுஞ்சாலையில் செல்லும் வாகனங்களுக்கு விசேட அறிவுறுத்தல்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கொக்மாதுவ இடைமாறும் பாதையிலிருந்து இரு திசைகளிலும் (வெலிகம மற்றும் கனங்கே) செல்ல முடியாத அளவிற்கு வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது. வெலிகம நோக்கி சுமார் ஒன்றரை அடி ஆழமும் கனங்கே, வெலிகம இமதுவ வீதியை நோக்கி சுமார் நான்கு அடி ஆழமும் நீர் நிரம்பியுள்ளது.

இதனால், இதில் பயணிக்கும் சிறிய வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.எனினும்,பெரிய வாகனங்கள் தற்போது வெலிகம நோக்கி செல்லக் கூடியதாக உள்ளது. கொழும்பிலிருந்து வரும் வாகனங்கள், மத்தள பகுதியிலிருந்து வரும் வாகனங்கள் பாலட்டுவ இடைமாற்றுப் பாதை காரியாலயத்தையும் மற்றும் கொடகம இடைமாற்றுப் பாதை காரியாலயத்தையும் பயன்படுத்துமாறு வீதி அபிவிருத்திஅதிகார சபை பணிப்பாளர் நாயகம் கேட்டுள்ளார்.

# பாடசாலைகள் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கு ரூ. 1,500 மில். ஒதுக்கீடு

## சபையில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஒவ்வொரு விளையாட்டுக்களிலும் தமது திறமையை வெளிப்படுத்தி வரும் பாடசாலைகளை விளையாட்டு பாடசாலைகளாக நியமித்து அவற்றை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டம் அடுத்த வருடம் ஆரம்பமாகும் என கல்வி யமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாடசாலை விளையாட்டுத்துறை அபிவிருத்திக்காக 1500 மில்லியன் ரூபா அடுத்த வருடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், அதனை கிராமிய ரீதியில் திறமையான விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

அதே வேளை விளையாட்டுக்களில் திறமையை வெளிப்படுத்தாத பாடசாலைகளை விளையாட்டு பாடசாலைகளாக பெயரிடுவது பொறுத்தமற்றது என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய் மூல விடைக்கான வினாக்கள் வேளையில் பிரேம்நாத் சீ தொலவத்த எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

தற்போதைய விளையாட்டு பாடசாலைத் திட்டம் தோல்வியடைந்துள்ளது. வலல ஏ ரத்னாயக்க பாடசாலை விளையாட்டு பாடசாலையல்ல. எனினும் அதில் சிறந்த விளையாட்டு வீரர்கள் உருவாகியுள்ளார்கள். அவர்கள் சர்வதேச ரீதியில் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# Dialog தனது National Innovation Challenge போட்டிக்கான கூட்டாளர்களை அறிவித்தது




படத்தில்இடமிருந்துவலமாக: விரங்கசெனவிரத்ன- Ideamart இன் சிரேஷ்டபொதுமுகாமையாளர்- டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, அர்ஜுன்ஜெகர்- துணைத்தலைவர்- இலங்கை டிஜிட்டல் சந்தைப்படுத்தல்சங்கம் (DMASL), பேரா. ரஞ்சித் திசாநாயக்க, தலைவர்- இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகம் (IESL), பேரா. மலிக்ரணசிங்க- தலைவர்- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் (ICTA), சுபுன்வீரசிங்க- குழும பிரதம நிறைவேற்று அதிகாரி- டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, சனத்சேனாநாயக்க- பிரதம நிறைவேற்று அதிகாரி நிர்வாகஇயக்குனர்- இலங்கைசந்தைப்படுத்தல்நிறுவகம் (SLIM), வரதராஜாகுமரகுரு- சிரேஷ்டதிட்டமுகாமையாளர்- இலங்கை வர்த்தகசம்மேளனம் (CCC), சிரில்சுடுவெல்ல- ஆணையாளர்- இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக்குழு, கலாநிதி. சச்சீபணவல- மேலதிக பிரதம புத்தாக்க அதிகாரி- தேசியகண்டுபிடிப்பு முகவர் நிறுவனம் (NIA).

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, இலங்கையின் முன்னணி இணைப்பு வழங்குனர், Dialog Innovation Challenge இதற்கான தனது கூட்டாளர்களை பெருமிதத்துடன் அறிவித்தது. நாட்டை டிஜிட்டல் தொழில்நுட்பம் நோக்கிஇட்டுச்செல்லும் வல்லமை படைத்த புத்தாக்கமான டிஜிட்டல் தீர்வுகளை வலுப்படுத்துவதே இந்த முன்னெடுப்பின் நோக்கமாகும்.

சமீபத்திய கூட்டாளர் உள்ளடக்கங்கள், பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பைவளர்க்கும் இந்த தேசியமுயற்சியில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைக்குறிக்கிறது. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர்நிறுவனம் (ICTA) தேசியதொழில்நுட்ப பங்காளராக பொறுப்பேற்று சவாலின் தொழில்நுட்ப அடித்தளத்திற்கு ஆதாரமாய் திகழ்கிறது. இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகம் (IESL), இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக்குழு (SLIC) மற்றும் தேசியகண்டுபிடிப்பு முகவர் நிறுவனம் (NIA) ஆகியவை தொழில்நுட்ப சுற்றுச்சூழல் பங்குதாரர்களாக கைகோரக்கின்றன. வர்த்தகஅறிவுகூட்டாளர்களாக, இலங்கைவர்த்தக சம்மேளனம் (CCC), இலங்கைசந்தைப்படுத்தல் நிறுவகம் (SLIM), மற்றும் இலங்கை டிஜிட்டல் சந்தைப்படுத்தல்சங்கம் (DMASL) ஆகியவைஇந்தமுன்னெடுப்புக்கு இணையற்ற தொழிற்துறை அறிவை அளிக்கின்றன.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் மலிக் ரணசிங்க இந்த கூட்டாண்மை குறித்துபேசுகையில், ICTA சார்பாக, Innovation Challenge இல் Dialog உடன் பங்காளியாக கை கோர்ப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். தனியார் அல்லது பொதுத்துறையாக இருந்தாலும், நல்லபடியான வெளிப்பாடுகளுக்கான ஒத்துழைப்பு மீது நாம்நம்பிக்கை வைத்துள்ளோம். National Fuel Pass முன்னெடுப்பானது கடந்தகாலத்தில் Dialog உடனான எங்களின் வெற்றிகரமான கூட்டாண்மையை எடுத்துக்காட்டுகிறது. இந்த தேசிய முன்னெடுப்பில் பெருமளவிலானஇலங்கையர்களை சென்றடைந்து அவர்களை ஈடுபடுத்துவதில் டயலொக் வெற்றி பெற வாழ்த்துகின்றோம். இந்த முன்னெடுப்பின் வெற்றியை ஊர்ஜிதப்படுத்துவதற்காக டயலொக் மற்றும் தேசிய சமூகத்திற்கு ஆதரவளிக்க ICTA உறுதிபூண்டுள்ளது என்றார்.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்க அவர்கள் கருத்துத்தெரிவிக்கையில், தேசிய Dialog Innovation Challenge க்காக எமதுமதிப்பிற்குரிய பங்காளிகளுடன் இணைந்து இந்த மாற்றங்கள் மிகு பயணத்தை மேற்கொள்வதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். எங்கள் பங்காளிகளுடன் இணைந்து, இலங்கை முழுவதும் டிஜிட்டல் கண்டுபிடிப்புகளை இயக்க உள்ளோம். இந்த மூலோபாய கூட்டாண்மை நாட்டின் டிஜிட்டல் எதிர்காலத்தை வடிவமைப்பதில் எங்களின் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும். நாடு முழுவதிலும் உள்ள தனிநபர்கள், வணிகங்கள் மற்றும் சமூகங்களுக்கு நன்மைபயக்கும் மாற்றத்தை உருவாக்குவதற்கு தொழில்நுட்பத்தின் சக்தியைப்பயன்படுத்துவதால், இந்த முன்னோடி முயற்சியில் எங்களுடன் இணைந்துகொள்ளுமாறு அனைத்து இலங்கையர்களுக்கும் நாம் அழைப்பு விடுக்கிறோம என்றார்.

Dialog Innovation Challenge ஆனது நாட்டின் டிஜிட்டல் எதிர்காலத்திற்கு பங்களிக்குமாறு அனைத்து இலங்கையர்களுக்கும் அழைப்புவிடுக்கிறது. AI> machine learning> IoT> blockchain மற்றும் பலபோன்ற தொழில்நுட்பங்களை மேம்படுத்தும் புதுமையான தீர்வுகளை சமர்ப்பிக்க தனிநபர்களும் குழுக்களும் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.ரூ. 5 மில்லியன் தாராளமானபரிசுத்தொகையுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றியாளர்களுக்கு ரூ.500 மில்லியன DIF (Dialog Innovation Foundry) முதலீட்டு நிதியின் ஒருபகுதியைப்பெறுவதற்கான வாய்ப்பு, வழிகாட்டுதல் மற்றும் டயலொக்கின் கண்டுபிடிப்பு சுற்றுச்சூழல் அமைப்புக்கான அணுகல் ஆகியன கிடைக்கப்பெறும்.

பங்கேற்பாளர்கள் தங்கள் யோசனைகளை முன்னோக்கி நகர்த்த ஒருதனித்துவமான வாய்ப்பைப்பெற்றுள்ளனர்.

பங்கேற்பதற்கு, www.dialog.lk/icஐபார்வையிடுங்கள்

# ஒரு கோடி ரூபா பெறுதியான மடிகணினிகளை கடத்த முயற்சி

## விமான நிலையத்தில் வர்த்தகர்கள் கைது

பெறுமதியான பொருட்களைக் கொண்டு சென்ற வர்த்தகர்கள் இருவர் விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

ஒரு கோடி ரூபா பெறுமதியான மடிகணினிகள், கையடக்க தொலைபேசிகள் மற்றும் உபகரணங்களை, வரி செலுத்தாமல் கொண்டு செல்வதற்கு இவர்கள் முயன்றுள்ளனர். இவ்வர்த்தகர்கள் இருவரும் சகல சோதனைகளையும் கடந்து இப்பொருட்களை விமான நிலையத்திற்கு வெளியே எடுத்துச் செல்லும்போது, கைது செய்யப்பட்டனர். வரி செலுத்தாமல் இப்பொருட்களை வர்த்தகர்கள் இருவர் கொண்டு செல்ல முயல்வதாக விமான நிலைய பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. இதையடுத்து உஷாரடைந் த பொலிஸார் இவ்விருவரையும் கைது செய்தனர்.

# துன்புறுத்தல், வன்முறைகளுக்குள்ளான பெண்களின் எண்ணிக்கை 20 ஆயிரம்

## நெதாஞ்சலி மாபிடிகம தெரிவிப்பு



2023 ஆம் ஆண்டில் இதுவரை 20,000 க்கு ம் மேற்பட்ட பெண்கள் பல்வேறு துன்புறுத்தல்கள், வன்முறைக்குள்ளாகியுள்ளதாக சுகாதார அமைச்சின், குடும்ப சுகாதாரப் பிரிவின் வைத்தியர் நெதாஞ்சலி மாபிடிகம தெரிவித்துள்ளார்.

பெண்களுக்கு எதிரான மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை (SGBV) தீர்ப்பதற்கான பல்துறை தேசிய செயற்திட்டத்தை முன்வைத்து அதன் உள்ளடக்கம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கான விசேட செயலமர்வு கடந்த 08 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது.

இந்த செயலமர்வு பாராளுமன்ற பெண் பிரதிநிதிகளின் ஒன்றியத்தின் தலைவர் பாராளுமன்ற வைத்திய கலாநிதி சுதர்ஷினி பெர்னாந்துபுள்ளே எம்.பி மற்றும் சிறுவர்கள், பெண்கள் மற்றும் பாலினம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி தலதா அத்துகோரள ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது. வீட்டில் பெண்களுக்கு எதிராக இடமபெரும் வன்முறைகளை தடுத்தல் மற்றும் பணியிடத்தில் பெண்கள் முகம் கொடுக்கும் துன்புறுத்தல்களைத் தடுப்பதற்கு இந்தத் திட்டம் ஊடாக பிரயோகரீதியாக செயற்பட வேண்டுமென இதன்போது கருத்துத் தெரிவித்த துறைசார் மேற்பார்வைக் குழு உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த சுகாதார அமைச்சின், குடும்ப சுகாதாரப் பிரிவின் வைத்தியர் நெதாஞ்சலி மாபிடிகம இங்கு குறிப்பிடுகையில், நாட்டில் குறிப்பிடத்தக்க அளவு பெண்கள் கர்ப்ப காலத்தில் வன்முறைக்கு முகம் கொடுப்பதாகச் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் இந்த ஆண்டில் தற்பொழுது பல்வேறு துன்புறுத்தல்கள் மற்றும் வன்முறைக்கு உள்ளாகிய பெண்களின் எண்ணிக்கை

06

தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 28ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஊலா பிறை 29

### குறள் தரும் சிந்தனை



கரப்பிடும்பை யில்லாரைக் காணின் நிரப்பிடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும்

இருப்பதைக் கொடுக்க மனமின்றி மறைத்திடும் இழிநிலை இல்லாதவர்களைக் கண்டாலே, இரப்போரின் வறுமைத் துன்பம் அகன்று விடும்.

## நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப வேண்டியது மிகவும் அவசியம்

இலங்கை பல்லின மக்கள் வாழும் நாடாகும். சிங்களம், தமிழ் மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் இங்கு வாழ்கின்றனர். இவர்கள் பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களையும் தமிழ், முஸ்லிம், சிங்களம் ஆகிய இனங்களையும் சேர்ந்தவர்களாக உள்ளனர்.

இன, மத, மொழி ரீதியில் பல்வகைமையைக் கொண்டுள்ள மக்கள் வாழும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாக விளங்குகிறது. இது உலகிற்கான தனித்துவம் மிக்க அடையாளங்களில் ஒன்றாகும். இவ்வாறான பல்வகைமையை ஒருங்கே பெற்றுக் கொண்டுள்ள நாடுகள் உலகில் மிகவும் குறைவாகும். இதன் சிறப்பும் முக்கியத்துவமும் புரிந்து கொள்ளப்படாததன் விளைவாகவே இன ரீதியிலான முரண்பாட்டுக்கு இந்நாடு உள்ளானது.

இந்நாட்டு மக்களைப் பலவீனப்படுத்தவும் அவர்களைப் பிரித்தாளவும் பிரித்தானிய ஏகாதிபத்தியம் இந்நாட்டின் இன, மத, மொழி ரீதியிலான பல்வகைமையை கையிலெடுக்க முயற்சி செய்தது. ஆனால் அம்முயற்சி அவர்களது ஏகாதிபத்தியம் முற்றுப் பெற்ற பின்னர்தான் பயனளிக்கத் தொடங்கியது.

அதாவது இந்நாட்டின் சுதந்திரத்தின் பின்வந்த ஆட்சியாளர்களில் சிலர், சுதந்திரத்திற்கு முன் பிரித்தானிய ஏகாதிபத்தியம் விதைத்த பிரித்தாளும் கொள்கையை தம் கையில் எடுத்தனர். அதாவது சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் சகலரும் ஒன்றுபட்டுச் செயற்பட்டனர். ஆனால் சுதந்திரத்தின் பின்னர் இன, மொழி, மத ரீதியிலான பார்வையும் சிறுபான்மை, பெரும்பான்மை என்ற நோக்கும் மேலோங்க அவர்கள் வித்தூன்றினர்.

இது பெரும்பான்மையினரின் வேலைத்திட்டங்கள் குறித்து சிறுபான்மையினர் மத்தியில் சந்தேகமும், ஐயமும் தோற்றம் பெற வழிவகுத்தது. அவை ஜனநாயக ரீதியிலான அகிம்சைப் போராட்டங்களுக்கும் வழிவகுத்தன. ஆனால் அப்போராட்டங்களின் நிமித்தம் அளிக்கப்பட்ட பிரதிபலிப்புக்கள் சிறுபான்மை, பெரும்பான்மை என்ற சந்தேகங்களை வளர்க்கும் வகையில் அமைந்திருந்தன. சில ஆட்சியாளர்கள் முன்னெடுத்த சில வேலைத்திட்டங்களும் இச்சந்தேகங்களை வளர்க்கக் கூடியனவாக இருந்தன.

இந்தச் சந்தேகங்கள் ஆயுத ரீதியிலான போராட்டத்திற்கும் துணைபோயின. அதனால் சுமார் 30 வருடங்கள் ஆயுத மோதல் நீடித்தது. அழிவும் இழப்பும் சேதங்களும்தான் அதன் விளைவாகின. அதன் காரணத்தினால் நாடு பொருளாதார ரீதியில் பல வருடங்கள் பின்தள்ளப்பட்டது. விலைமதிக்க முடியாத மனித வளமும் சொத்துக்களும் இழக்கப்பட்டன. இந்த யுத்தத்தினால் அழிவுகளையும் இழப்புக்களையும் சேதங்களையும் தவிர நாடோ மக்களோ பெற்றுக் கொண்ட பிரதிபலன்கள் எதுவுமில்லை.

இந்த யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டும் 14 வருடங்களாகியும் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் இன்னும் முழுமையாக நீங்கியதாக இல்லை. இவ்வாறான ஐயங்களை வைத்துக் கொண்டு நாடொன்றை அபிவிருத்திப் பாதையில் இட்டு செல்ல முடியாது. பல்லின மக்கள் வாழும் நாடொன்றை அபிவிருத்தி பாதையில் இட்டு செல்வதற்கு இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் சகலரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் அவ்வாறு செயற்படுவதன் விளைவாகவே இலங்கையை விடவும் பல மடங்கு அவை முன்னேற்றமடைந்திருக்கின்றன. ஆனால் இலங்கை சுதந்திரமடையும் போது இந்த இரு நாடுகளும் இலங்கையை விடவும் பெரிதும் பின்னடைந்தே காணப்பட்டன.

அந்த வகையில் கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதன் அவசியம் தற்போது பரவலாக உணரப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் உலக தமிழர் பேரவை மற்றும் சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையிலான அனைத்துக் கட்சி பாராளுமன்ற உறுபபினர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நடைபெற்றுள்ளது.

இச்சந்திப்பிற்கு தலைமை தாங்கி உரையாற்றிய சாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்ன, 'இலங்கையில் நீடித்து வருகின்ற இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு அனைத்து இனங்களுக்கும் இடையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்காக உலகத் தமிழர் பேரவையினர் பௌத்த தேரர்களுடன் இணைந்து ஒரு புனித பயணத்தை முன்னெடுத்துள்ளார்கள். அப்பயணம் வெற்றி பெறுவதற்கு இதுவே பொருத்தமான தருணம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் இனங்களுக்கு இடையிலான முரண்பாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். நாட்டில் நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட வேண்டும். இந்த தேசத்திற்கு நல்லிணக்கமும் ஒற்றுமையும் மிகவும் அவசியமானது. இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பாலான ஐக்கியத்தின் ஊடாக இலங்கையர் என்ற அடையாளத்துடன் ஒன்றுபட்டு செயற்படும் போது நாடு வளம் பெறும். அப்போது தான் பொருளாதார மறுமலர்ச்சியை அடைந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். அது நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயப்பதாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# கலங்கரை விளக்காக அறிவொளி வீசும் காரைநகர் இந்துக் கல்லூரி




**காரைநகர் இந்துக் கல்லூரி கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் 25ஆவது வருட வெள்ளி விழா ஒன்றுகூடல் எதிர்வரும் சனிக்கிழமை (16) மாலை 5.00 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில்**

அறுகு போல் வேரூன்றி ஆல் போல் தழைத்து, காரைநகரின் கலங்கரை விளக்காக அறிவொளி வீசிவரும் பழைமையும் பாரம்பரியமும் மிக்க காரைநகர் இந்துக் கல்லூரி அன்று முதல் இன்றுவரை கல்வி கற்ற சமூகத்தை உருவாக்குவதற்காக அளப்பரிய சேவை வழங்கி வருகின்றது.

இப்பாடசாலையின் பெருமைக்கு வலுசேர்க்கும் வகையில் பல மகான்கள் தமது உன்னதமான உதவியை இப்பாடசாலைக்கு வழங்கி வருகின்றனர்.

"கல்வி அறிவொழுக்கங்களினால் சிறப்புற்ற மேலோர்களையே உங்களுக்கு குருமாராக ஏற்படுத்திக்கொள்ளுங்கள்".

"ஊர் தோறும் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்து உங்களுள்ளே கல்வி அறிவொழுக்கங்களில் சிறந்த மேலோர்களைக் கொண்டு அவற்றை நடத்துவியுங்கள். உங்கள் பிள்ளைகளை அப்பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி லௌகிக நூல்களையும் நீதிநூல்களையும் சைவசமய நூல்களையும் கற்பியுங்கள்" எனும் கருத்துகளினால் பெரிதும் கவரப்பெற்றவரே காரைநகர் மடந்தை செய்த தவம் வாய்த்ததென வந்த கர்ம வீரன் ஸ்ரீமான் சங்கரப்பிள்ளை அருணாசலம் ஆவார். ஸ்ரீமான் ச.அருணாசலம் தமக்கென வாழாது சைவத்துக்கும் தமிழுக்குமாய் வாழ்ந்தார்.

சைவ மாணவர்கள் கற்பதற்காக ஒரு சைவ ஆங்கிலப் பாடசாலையை காரைதீவு மண்ணில் அமைக்க வேண்டுமென்ற எண்ணம் அருணாசலம் மகானின் மனதில் கருக்கொண்டது. தமது எண்ணத்தை மாப்பாணவூரி கந்தப்பர் இலட்சுமண பிள்ளைக்கும் சிதம்பரப்பிள்ளை கந்தப்பவுக்கும் அயலவர் கோவிந்தபிள்ளைக்கும் தெரிவித்தார். இவரின் கருத்தால் உற்சாகமடைந்த கோவிந்தபிள்ளை தனது சொந்த நிலத்தில் ஒருபகுதியை பாடசாலை அமைக்க வழங்கி உதவியதுடன், யாழ்ப்பாணம், நல்லூர் முத்திரை சந்தியைச் சேர்ந்த சயம்பு எனும் சைவப்பற்றும் ஆங்கிலப் புலமையும் நிறைந்த ஆசானையும் அவர் நாடினார்.

இப்பாடசாலையில் பெரியார் சயம்பு ஆசிரியராக பணியாற்றத் தொடங்கியதுடன், சைவசமய கலாசாரத்தை மேலோங்கச் செய்யும் திறன்மிகு மாணவர்கள் உருவாகுவதற்கும் அவர் வழிசெய்தார்.

ஆரம்பக்காலக் கட்டத்தில் காரைநகர் இந்து ஆங்கில வித்தியாசாலையாக தொடங்கிய இப்பாடசாலை காலப் போக்கில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் ஆங்கில வித்தியாலயமாக பெயர்பெற்றது. இப்பாடசாலையில் அம்பலச்சட்டம்பியார் தமிழ்க் கல்வி போதித்தார்.

ஊர்மக்கள் மண்டபம், இரண்டு அறைகளை நிர்மாணித்து பாடசாலை வளர்ச்சிக்கு உதவியதுடன், இப்பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கு சென்று உயர் பதவிகளை வகித்து பாடசாலையின் பெருமையை மேலோங்க செய்தனர்.

125 ஆண்டுகள் கடந்து தளர்வின்றி தன்னிகரற்ற கல்விப் பணியாற்றி ஒளி வீசிக்கொண்டிருக்கின்ற இப்பாடசாலையின் பெருமைமிகு வளர்ச்சிப் பாதையில் இதுவரைகாலமும் 25 நல் அதிபர்கள் பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். அவர்களில் ஒருவரான எஸ்.ஆர்.எஸ்.தேவதாசன் அதிபராகவிருந்து பெரும் பணிகள் ஆற்றினார். அவர் மகத்தான சேவையை பாடசாலைக்கு வழங்கினார். காரைநகர் பாடசாலைகளின் கொத்தணி அதிபராகவும் எஸ்.ஆர். எஸ்.தேவதாசன் பணியாற்றினார்.

தலைமை ஆசிரியராக சிவத்திரு ஈ.கே.சிவசுப்பிரமணியம் ஐயரின் (B.A) காலத்தில் பாடசாலையின் கல்வித்தரம் உயர்வடைந்ததால், 1912 இல் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக மாற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து 07.09.1912 இல் பாடசாலை வெள்ளிவிழா கண்டது. அதியுயர் அதிபர்தர பதவி பெற்று காரைநகரின் முதன்மை பேராசானாக அதிபர் கலாநிதி ஆ.தியாகராசா சேவையாற்றிய காலத்தில் 1950.09.19ஆம், 20ஆம், 21ஆம் திகதிகளில் வைரவிழா, 1963 இல் பவளவிழா, 1968 இல் முத்துவிழா ஆகியன நடைபெற்றன.

பாடசாலையின் முகாமைத்துவப் பொறுப்பு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், ஏ.கனகசபை (B.A) அதிபராக 10 ஆண்டுகள் பதவி வகித்த காலத்தில் இப்பாடசாலை சிரேஷ்ட வித்தியாசாலையாகி காரைநகர் இந்துக் கல்லூரியாக பெயர் மாற்றப்பட்டது.

விஞ்ஞான ஆங்கிலப் புலமைமிக்க பட்டதாரி ஆசிரியர்கள் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டு, மாணவர்களுக்கு கற்றல் செயற்பாடுகள் சிறந்தமுறையில் முன்னெடுக்கப்பட்டன. H.S.C எனும் உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு, IAB பாடசாலையாகவும் தரம் உயர்த்தப்பட்டது. கல்வி மாத்திரமின்றி சமய விழாக்கள், விளையாட்டு உள்ளிட்ட ஏனைய துறைகளிலும் சிறப்புப் பெற்றது இப்பாடசாலை. 1971 இல் இவ்வித்தியாலயத்தின் கனிஷ்ட பிரிவாக சுப்பிரமணிய வித்தியாசாலை இணைக்கப்பட்டது. கணிதம், பௌதீகவியல், பாடங்கள் மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டு கணித, விஞ்ஞானத்துறைகள் மிளிரச் செய்யப்பட்டன. இப்பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் பல்கலைக்கழகங்களின் மருத்துவம், பொறியியல் பீடங்களுக்கு தெரிவாகி கல்லூரியின் பெயரை புகழ் பெறச் செய்தனர்.

1976 இல் காரைநகர் முத்தமிழ் மன்றம், பெரியார் முத்து சயம்புவுக்கு மணிமண்டபமும் சிலையும் அமைத்து திறப்புவிழா மிகச்சிறப்பாக நடத்தப்பட்டது. 1978_1980 காலப்பகுதியில் பரிசளிப்பு விழா நடத்தப்பட்டு, சிறப்புமலரும் வெளியிடப்பட்டது.

1983 இல் இப்பாடசாலைக்கு கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1988_ 1991 இல் இப்பாடசாலை கொத்தணி தலைமை பாடசாலையாக மாற்றப்பட்டது.

பழைய மாணவர்களின் நிதி உதவியுடன் பாடசாலையில் புதிய வகுப்பறைகள், விஞ்ஞான ஆய்வுகூடம், தங்கம்மா நடராஜாவால் வழங்கப்பட்ட நன்கொடையாக வழங்கப்பட்ட நூல் நிலையம், நடராஜா ஞாபார்த்த மண்டபம், அதனை அண்டிய நிலம், கணினி ஆய்வுகூடம் உள்ளிட்ட நவீன வசதிகளை பெற்று இப்பாடசாலை முன்னணி பாடசாலையாக திகழ்ந்து வருகின்றது.

இப்பாடசாலைக்கு மகளிர் இருவர் அதிபராகப் பணியாற்றியுள்ளனர். முதல் பெண் அதிபர் என்ற பெருமையை காரைநகர் களபூமியைச் சேர்ந்த தேவநாயகி பாலசிங்கம் பெறுவதுடன், இரண்டாவது பெண் அதிபராக வாசுகி தவபாலன் பெறுகின்றார்.

இதேவேளை யாழ். காரைநகர் இந்துக் கல்லூரி கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் 25ஆவது வருட வெள்ளி விழாவுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை (16) மாலை 5.00 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்நாடு சென்னையைச் சேர்ந்த சொல்லின் செல்வம் பி.மணிகண்டன் 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' எனும் தலைப்பில் இந்நிகழ்வில் உரையாற்றவுள்ளதாக, நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இ.இளங்கோவன், நிதி அமைச்சு அதிகாரி தி.விஸ்வரூபன், சைவமணி சண்முகரத்தினம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

'உனக்கு நீயே உண்மையாய் இரு' எனும் உயரிய நீதி வாசகத்துடன் இப்பாடசாலையின் உன்னதமான பணி என்றைக்கும் தொடர வாழ்த்துகிறோம்.



(உதவிக் கல்விப்பணிப்பாளராகப் பணியாற்றிய அமரர் திருமதி சிவபாக்கியம் நடராஜா அவர்களால் எழுதப்பட்ட கட்டுரை)

# அட்டாளைச்சேனை வைத்தியசாலைக்கு சக்கரநாற்காலி வழங்கிய மாணவ நண்பர்கள்

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் 1996 ஆம் ஆண்டு சாதாரண தரம் கல்வி கற்ற மாணவ நண்பர்கள் குழாத்தினரால் அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலைக்கு சக்கர நாற்காலி வழங்கி வைக்கப்பட்டது.

வைத்தியசாலையின் நீண்டகாலத் தேவையாக இருந்து, வைத்தியசாலையின் நிருவாகத்தினர் விடுத்த வேண்டுகோளினை கருத்திற் கொண்டு இச் சக்கர நாற்காலி வழங்கி வைக்கப்பட்டது. வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் அல்ஹாபிழ் யு.எல்.எம். வபா அவர்களிடம் சக்கர நாற்காலி வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாணவ நண்பர்கள் குழாத்தின் தலைவர் தாதிய உத்தியோகத்தர் எம்.எல்.ஜெசீல், செயலாளர் எஸ்.எம்.சித்தீக் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) மற்றும் முன்னாள் தலைவரும், அதிபருமான ஏ.எம்.மிஸ்வர், ஆசிரியர் கே.எல்.எம்.முனாஸ், முன்னாள் செயலாளரும், அபிவிருத்தி உத்தியோகத்தருமான ஏ.எம். நபீஸ்தீன், சஷா நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளரும் உறுப்பினருமான எஸ். அஜ்வர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



பாடசாலை நண்பர்கள் குழாம் உறுப்பினர்கள் இப்பிரதேசத்தில் நீண்ட காலமாக பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**றிசாத் ஏ. காதர்...**
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# க.பொ.த உயர்தரம் கற்கவிருக்கும் மாணவர்களுக்கு மருதமுனையில் திசைமுகப்படுத்தல் கருத்தரங்கு

கடந்த நவம்பர் மாதம் வெளியிடப்பட்ட பெறுபேறுகளின்படி க.பொ.த (சா/தர) பரீட்சையில் சித்தியடைந்த க.பொ.த (உ/த) கற்கவிருக்கின்ற மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் கருத்தரங்கு 13.12.20123 அன்று மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியின் அஷ்ரப் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.



இப்பாடசாலையின் அதிபர் ஐ.உபைதுல்லாஹ் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அவுஸ்திரேலியாவின் டீகன் பல்கலைக்கழக கட்டுமான முகாமைத்துவம், விஞ்ஞான,பொறியியல், கட்டுமானத்துறையின் பேராசிரியர் இம்றியாஸ் கமர்த்தீன் கலந்து கொண்டு விரிவுரையாற்றினார்.

இம்ரியாஸ் கமர்தீன் டீகன் பல்கலைக் கழகத்தில் கட்டடக்கலை மற்றும் பில்ட் சுற்றுச்சூழலின் பள்ளியில் கட்டுமான நிர்வாகத்தின் பேராசிரியர் மற்றும் தலைவராக உள்ளார்.

மருதமுனையைச் சேர்ந்த இவர் கல்வி மற்றும் தொழில்துறையில் விரிவான அனுபவங்களைக் கொண்ட ஆற்றல் மிக்க கல்வியாளர் மற்றும் ஆராய்ச்சியாளர் ஆவார். மேலும் முன்னணி கல்வித் திட்டங்கள், ஆராய்ச்சி, கற்பித்தல் மற்றும் குழுக்களில் நிரூபிக்கப்பட்ட தொழில்நுட்ப மற்றும் மென்மையான திறன்கள், ஆராய்ச்சி, கற்பித்தல் சிறப்புக்காக எட்டு விருதுகளையும் அவர் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரின் இவ்வருகையின் போது க.பொ.த உயர்தர முதலாமாண்டு பொறியியல்துறை மாணவனான அப்துல் ரஹீம் முகம்மட் அக்மல் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டு விரைவில் வெளியிடப்படவிருக்கும் ராடர் கருவியையும் பார்வையிட்டு அதற்கான வாழ்த்துகளையும் ஆலோசனைகளையும் வழங்கினார். பாடசாலையின் விஞ்ஞான பொறியியல் பகுதியையும் அவர் சென்று பார்வையிட்டார். குறித்த நிகழ்வில் மருதமுனையின் அனைத்துப் பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர்.

**வாஹிட் முகம்மது ஜெஸீல்...**

# ஊடகவியலாளர் கௌரவிப்பு விழா 2023




படங்கள் : நிச்சங்க விஜேரட்ன, கயான் புஷ்பிக்க

# தினகரன் ஊடகவியலாளர் இருவருக்கு ஆசிரியர் பீடத்தில் பாராட்டு




இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும், இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து நேற்று முன்தினம் கல்கிசை மவுண்ட் லவேனியா ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர்களுக்கான அதியுயர் விருது வழங்கும் விழாவில் வாழ்நாள் சாதனையாளர் உயர்விருது பெற்றுக்கொண்ட தினகரனின் மூத்த ஊடகவியலாளர்களான எம்.ஏ.எம். நிலாம், கரவெட்டி எஸ். தில்லைநாதன் ஆகிய இருவரும் நேற்று தினகரன் ஆசிரியபீடத்தில் வைத்து கௌரவிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள். தினகரன்/ வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் எஸ். செந்தில்வேலவர் தலைமையில் நடைபெற்ற இப்பாராட்டு விழாவின் போது, எம்.ஏ.எம். நிலாம், கரவெட்டி எஸ். தில்லைநாதன் ஆகிய இருவரும் பொன்னாடை போர்த்தியும், சந்தனமாலை அணிவித்தும் பாராட்டிக் கௌரவிப்பு நிகழ்வு தினகரன் ஆசிரியபீடத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்: ஷான் ரூபஸ்சர)

# பாவேந்தல் பாலமுனை பாறூக் எழுதிய 50 எழுத்து ஆளுமைகள் நூல் அறிமுக விழா



பாவேந்தல் பாலமுனை பாறூக் எழுதிய 50 எழுத்து ஆளுமைகள் நூல் அறிமுக விழா கொழும்பு தமிழ்ச் சங்க வினோதன் மண்டபத்தில் பேராசிரியர் செ. யோகராசா அரங்கில் நாளை மறுதினம் 16 ஆம் திகதி மாலை 3.45 மணிக்கு பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் நடை பெறும்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர் முன்னிலை வகித்து முதல் பிரதியை பெறவுள்ள இந் நிகழ்வில் ஈழத்தின் முன்னணி எழுத்தாளர்கள், கவிஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் நூல் நயவுரையை பேராசிரியர் எம்.எஸ். எம். அனஸ் நிகழ்த்த கருத்துரைகளை ஞானம் ஆசிரியர் எழுத்தாளர் டாக்டர் தி.ஞானசேகரன், எழுத்தாளர் உடுவை எஸ் தில்லை நடராஜா, கவிஞர் வாசுகி. பி.வாசு ஆகியோர் வழங்குவர்.

சந்தக் கவிமணி கிண்ணியா அமீர் அலி, கவிமணி நஜ்முல் ஹுசைன் ஆகியோர் கவி வாழ்த்துரைப்பர். தமிழன் பிரதம ஆசிரியர் சிவா ராமசாமி, தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர், வீரகேசரி பிரதம ஆசிரியர் ஸ்ரீ கஜன், தினக்குரல் பிரதம ஆசிரியர் கே.பி. ஹரன், உதயம் பிரதம ஆசிரியர் என்.எம். அமீன், தமிழ்மணி மானா மக்கீன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்வர்.

இவ்வரங்கில் இதன்போது வரவேற்புரையை நிகழ்ச்சித் தொகுப்பாளரும் தமிழ்முரசு ஆசிரியருமான ஜீவா சதாசிவம் நிகழ்த்துவார்.



இலங்கை பத்திரிகை பேரவையினால் ஊடகவியலாளர்களின் பிள்ளைகளுக்கு இலவச பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடமிருந்து சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எப்.றிபாஸ் உபகரணங்களை பெறுவதைக் காணலாம். (படம்: திராய்க்கேணி தினகரன் நிருபர்)

## போதகர் ஜெராமிற்கு...

உத்தரவிட்டுள்ளது. குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் இவர் (01) கைதாகியிருந்தார். வாக்குமூலத்தைப் பதிவுசெய்வதற்காக வந்த சில மணித்தியாலங்களின் பின்னர் கைதான இவர், விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ நவம்பர் 30 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் முதன்முறையாக முன்னிலையாகி சுமார் 08 மணித்தியாலங்களுக்கு வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

# இன்றைய பலன்கள்

## ( 14. 12. 2023 )

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)





**மேஷம்:**
போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் ஏற்படும். புனித பயணங்கள் அதிகரிக்கும்.



**ரிஷபம்:**
ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். தொழில் ரீதியாக எடுத்த புது முயற்சியில் வெற்றி கிடைக்கும்.



**மிதுனம்:**
மனச்சோர்வு அதிகரிக்கும். எளிதில் முடிக்கக்கூடிய காரியங்கள் கூட மலைப்பாக தோன்றும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும்.



**கடகம்:**
தொழில் முன்னேற்றம் உண்டு. வியாபார போட்டிகள் அதிகரிக்கும் அதை சமாளிப்பீர்கள். குடும்பத்திற்காக அதிகம் செலவிட நேரிடும்.



**சிம்மம்:**
எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். இல்லம் தேடி நல்ல தகவல் வந்து சேரும்.



**கன்னி:**
தைரியத்தோடும் தன்னம்பிக்கையோடும் செயற்படுவீர்கள். தர வரவு திருப்திகரமாக இருந்தாலும் விரயங்கள் அதிகரிக்கும்.



**துலாம்:**
நினைத்தது நிறைவேறும். நிகழ்கால தேவைகள் பூர்த்தியாகும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும்.



**விருச்சிகம்:**
தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.



**தனுசு:**
ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை தேவை. அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியில் ஆதாயம் குறைவாகவே கிடைக்கும்.



**மகரம்:**
உடல்நலம் சீராகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். கடன் சுமை குறையும். கவலைகள் அகலும்.



**கும்பம்:**
லாபமும் விரையமும் சம அளவில் இருக்கும். செலவிற்கு முன்னதாகவே வரவு வந்து சேரும்.



**மீனம்:**
அதிக விரயங்கள் ஏற்படலாம். திடீர் திடீரென மாற்றங்களும் எதையும் அரைகுறையாக செய்து அவதிப்படும் சூழ்நிலையும் உண்டு.

## நாட்டைக் கட்டியெழுப்ப...

தொடர்பில் நாட்டு மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் இவ்வாறான கற்பனைக் கதைகளில் சொல்லப்படும் விடயங்களை நிறைவேற்ற முயற்சிப்பதன் மூலம் நாடு மீண்டும் வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்படும். நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுதல் மற்றும் கடன் மறுசீரமைப்பு ஆகிய இரண்டு அடிப்படைக் காரணிகளை உரிய முறையில் கையாள்வதன் மூலம் நல்ல பலன்களைப் பெற முடிந்தது. இந்த வேலைத்திட்டத்தை தொடர்வதன் மூலம் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்ற முடியும். சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணையின் அங்கீகாரத்துடன், இலங்கையின் நிதித்துறையை பெரிதும் பலப்படுத்தும் வைப்புத் தொகை காப்புறுதிக்காக உலக வங்கியில் இருந்து 150 மில்லியன் டொலர்கள் கிடைக்கிறது.இதன் மூலம் நாட்டின் வங்கி மற்றும் நிதித்துறை நூறு வீத பாதுகாப்பாக இருக்கும்.

VAT உட்பட பல்வேறு வரிகள் விருப்பத்துடன் விதிக்கப்பட்டதல்ல, ஆனால் நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு அந்த கடினமான தீர்மானங்களை எடுக்க நேர்ந்தது. இந்த நடவடிக்கைகளால் பொருளாதாரம் வலுவடையும் போது மக்களுக்கு அதிக நிவாரணங்களை வழங்க முடியும்.

எனவே நாம் இதுவரை வந்த பாதையை கைவிட இடமளிக்க வேண்டாம். சிலர் பேச்சுக்களுடனும் விமர்சனங்களுடனும் நின்றுவிடுகின்றனர். இந்நிலையில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஆதரவைத் திரட்டி நாட்டை வெற்றிப்பாதைக்கு கொண்டு வந்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## 2024 பட்ஜட்டின் மூன்றாவது...

இதன்படி, 2024 ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் மூன்றாம் வாசிப்பு 41 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றது.ஆளும்கட்சி மற்றும் எதிர்க் கட்சிகள் இடையே கடுமையான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்ற நிலையில் மாலை 6.40 அளவில் வாக்கெடுப்பு நடைபெற்றது. ஆளுங் கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன பாதீட்டை ஆதரித்து வாக்களித்ததுடன், எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எதிர்த்து வாக்களித்தது.

தேசிய மக்கள் சக்தியும் எதிராகவே வாக்களித்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் உறுப்பினர்கள் மற்றும் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பாதீட்டுக்கு ஆதரவாகவே வாக்களித்தது.

அண்மையில் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட ரொஷான் ரணசிங்க, பாதீட்டுக்கு எதிராகவே வாக்களித்தார். வடிவேல் சுரேஷ் இரண்டாம் வாசிப்பை போன்று பாதீட்டை ஆதரித்தே வாக்களித்தார்.

2024ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம், நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் கடந்த நவம்பர் 13இல், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

14 முதல் 21ஆம் திகதிவரை, பாதீட்டின் இரண்டாம் வாசிப்பு மீதான குழுநிலை விவாதம் இடம் பெற்றது.

இரண்டாம் வாசிப்பு 45 மேலதிக வாக்குகளால் சபையில் நிறைவேற்றப்பட்டது. இதற்கு ஆதரவாக 122 வாக்குகளும், எதிராக 77 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 25 பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவாக வாக்களித்தது. எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி (SJB) மற்றும் தேசிய மக்கள் சக்தி (NPP) ஆகியவை எதிராக வாக்களித்தமையும் குறிப்பிடத்தக்கது.

நவம்பர் 21ஆம் திகதி முதல் டிசம்பர் 13ஆம் திகதிவரை மூன்றாம் வாசிப்பு மீதான விவாதங்கள் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

## இரண்டாம் தவணை கடனுக்கு...

அளித்திருந்தது. இவ்வுதவி கிடைத்ததும் இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் வழங்கிய கடன்தொகை 670 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கிறது. இதன் அடிப்படையில் முதற்கட்டமாக 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டன.இதன் பின்னர் கடந்த ஒக்டோபர் மாதம், சர்வதேச நாணய நிதியத்தின் நிதிக்குழு 48 மாத கால விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழான,முதலாவது மதிப்பாய்வில் இலங்கை அதிகாரிகளுடன் ஒப்பந்தம் எட்டப்பட்டது.

இதற்கான ஒப்புதலையே தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு வழங்கியுள்ளது. இலங்கை தொடர்பான செயற்குழு விவாதத்தைத் தொடர்ந்து, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கென்ஜி ஒகாமுரா அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இலங்கையின் பொருளாதாரக் கொள்கை சீர்திருத்தங்கள் பலனைத் தரத் தொடங்கியுள்ளன.

விரைவான பணவீக்கம், குறிப்பிடத்தக்க வருவாய் அடிப்படையிலான நிதியைச் சரிசெய்தல் மற்றும் இருப்புக்களை உருவாக்குதல் ஆகியவற்றுடன் பொருளாதாரம் ஸ்திரத்தன்மைக்கான தற்காலிக அறிகுறிகள் தென்படுகின்றன.

ஜூன் இறுதிக்கான சகல செயல் திறன் அளவுகோல்களும் இலங்கையால் பூர்த்தி செய்யப்பட்டு,செலவு நிலுவைகள் மற்றும் வரி வருவாய் மீதான இலக்கைத் தவிர, சகல குறிகாட்டி இலக்குகளும் எட்டப்பட்டுள்ளன.

உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழு மற்றும் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கி ஆகியவற்றுடன் கடன் மறுசீரமைப்புக்கள் தொடர்பான இலங்கையின் உடன்படிக்கைகள், சர்வதேச நாணய நிதியத்தின் இலக்குகளுடன் ஒத்துப்போகின்றன.

இந்தநிலையில் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் சரியான நேரத்தில் அமுல்படுத்தப்படுகிறது.

வெளிநாட்டு தனியார் கடன் வழங்குநர்களுடன் ஒரு தீர்வை எட்டுவது, இலங்கையின் கடன் நிலைத்தன்மையை நடுத்தர காலத்திற்கு மீட்டெடுக்க உதவும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலாபமீட்டும் நிறுவனமாக...

பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இங்கு பேசிய அமைச்சர்,

இலங்கை போக்குவரத்து சபை இலாபமீட்டும் நிலையை அடைய வேண்டும். தனியார் மயமாக்கப்படாமல் இந்த இலக்கை எட்டுவது இன்றியமையாதது. 23,000 ஊழியர்களை கொண்டுள்ள தபால் திணைக்களம் எமது அமைச்சின் கீழ் இயங்குகிறது. அரசாங்க கொள்கைகளை மாற்றும் திறன் இவர்களுக்கு இல்லை.சம்பள உயர்வு கோரினாலும் இந்நேரத்தில் இதை வழங்க முடியாது. அரசாங்க ஊழியகளின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம்,சமுர்த்தி போன்றவற்றுக்கு திறைசேரியில் மேலதிக பணம் இல்லை. மானியங்கள் உள்ளிட்ட சகல நடவடிக்கைகளும் வெளிநாட்டு மற்றும் உள்ளூர் கடன்களை பெற்றே வழங்கப்படுகின்றன.கடனை செலுத்தாத காரணத்தால் அதிக கடன்களை வாங்கும் திறன் தற்போது இல்லை.

ஈட்டப்படும் வருமானத்தில் சம்பளம் கொடுக்க வேண்டிய நிலையில் இலங்கை போக்குவரத்து சபை உள்ளது.

புதிய தலைவர் நியமிக்கப்படுவதற்கு முன்னர், இலங்கையிலுள்ள 107 டிப்போக்களில் 39 டிப்போக்களில் சம்பளம் வழங்க முடியாத நிலை இருந்தது.

மிகவும் திறமையான மற்றும் லாபகரமான டிப்போக்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளன. பொதுப் போக்குவரத்து சேவைகளை வழங்குவதன் மூலம் தனியார் துறையினர் லாபம் ஈட்ட முடியும் என்றால், அரசு ஆதரவுடன் இயங்கும் நிறுவனங்களும் லாபம் ஈட்டலாம்.

## கடற்றொழில், நீரியல் துறைக்கு...

இங்கு கருத்து தெரிவித்த அமைச்சர்: 2024 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் கடற்றொழில் அமைச்சுக்காக 8400 மில்லியன்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதில் 6077 மில்லியன்கள் மூலதனச் செலவாகவும் 2323மில்லியன் ரூபா மீண்டுவரும் செலவாகவும் உள்ளது.

அரசாங்கத்தின் இந்நிதி ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக, நாட்டின் கடற்றொழிலை வளப்படுத்தும் வகையில் மேலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தனியார் முதலீடுகளையும் ஊக்குவித்து வருகிறோம்.

எரிபொருள் விலை உயர்வு கடற்றொழிலாளர்களின் தொழிலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது. பல்வேறு காரணங்களாலேயே சர்வதேச சந்தையில் எரிபொருள் விலைகள் அதிகரிக்கின்றன. இவ்வாறு அதிகரிக்கும்போது இலங்கையிலும் அதன் விலைகள் அதிகரிக்கின்றன.

எரிபொருள் செலவு போன்ற உற்பத்திச் செலவுகளைக் குறைக்க பல்வேறு மாற்று வழிமுறைகளை பயன்படுத்தப்படும். அந்த வகையில், படகுகளில் Battery Motors பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்தும் ஆய்வுகளை மேற்கொள்கிறோம். இது மீனவர்களின் உற்பத்திச் செலவைக் குறைப்பதுடன் எரிபொருள் பிரச்சினைக்கும் தீர்வாக அமையும். எமது அமைச்சு திருத்தப்பட்ட புதிய கடற்றொழில் சட்டமொன்றை தயாரித்து வருகிறது.இது,தற்போது சட்ட வரைவு என்ற நிலையிலேயே உள்ளது.இந்திய மீனவர்களின் அத்துமீறல் பிரச்சினை யை, ராஜதந்திர ரீதியிலேயே அணுக வேண்டியுள்ளது. இந்திய அரசியலமைப்பின் பிரகாரம் மீன்படி விடயம் மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டது. வட மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து நேரடியாக இந்தியாவுக்கே சென்று பாண்டிச்சேரி மற்றும் தமிழ் நாட்டு அரசு உட்பட இந்திய ஊடகங்களுடன் கலந்துரையாடுவதே சிறந்த தீர்வாக அமையும்.

## புலமைப்பரிசில் பரீட்சையை...

தற்போதைய நிலைமையை விட இலகுவாக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். இது குறித்து மேலும் குறிப்பிட்ட அமைச்சர்: மாணவர்களின் எழுத்தறிவு மற்றும் எண்ணியல் திறன்களை அளவிடுவதற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

எதிர்காலத்தில் பரீட்சையில் நூறு வீத சித்திகளைப் பெற்று மாணவர்கள் மதிப்பீடு செய்யப்படமாட்டார்கள். ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 30 வீத புள்ளிகளைப் பெறுவதோடு 4ம் மற்றும் 5ம் தரங்களில் நடத்தப்பட்ட மதிப்பீட்டில் பெறப்பட்ட மதிப்பெண்களில் 30 வீதமான மதிப்பெண்களை மாணவர்கள் பெற வேண்டும். இதற்காக தொடர்ச்சியான வருகைப் பதிவை மாணவர்கள் பெற வேண்டும்.

ஆசிரியர்கள் பாரபட்சமாக நடந்து கொள்வார்கள் என்று சில பெற்றோர்கள் விமர்சிக்கலாம், ஆனால் அவ்வாறான சூழ்நிலைகளுக்கு இடமளிக்கப்படாது. எல்லாவற்றிற்கும் மேலாக ஆசிரியர்கள் பற்றிய தெளிவான நம்பிக்கை பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் ஏற்படுத்துவதே முக்கியம்.

வகுப்பறைகளில் மாணவர்கள் எவ்வாறு மதிப்பிடப்படுகிறார்கள் என்பதை பாடசாலை வாரியங்கள் கண்காணிக்கின்றன. சிறந்த கல்வியைக் கொண்ட நாடாக அங்கீகரிக்கப்பட்ட பின்லாந்தில் கூட 09 ஆம் வகுப்பு வரையிலான பாடசாலைகளிலும் வகுப்பறை அளவிலான மதிப்பீடுகள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன.

2023 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் மற்றும் 2022ல் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் மதிப்பீடு செய்யும் நிகழ்வில்,கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

## மின் கட்டணங்கள் ஜனவரி...

தற்போதுள்ள நிலக்கரி தொழிற்சாலை மற்றும் டீசல் தொழிற்சாலைகளை நிறுத்தி வைக்க முடிந்துள்ளதால் மின் கட்டணங்கள் குறைவதற்கான வாய்ப்புக்களும் அதிகரித்துள்ளன. இம்மாதம் 31 இல், இருப்பு நிலை அறிக்கைகள் கிடைத்ததும் நுகர்வோர் பயனடையும் வகையில் மிண் கட்டணங்களில் திருத்தம் செய்யப்படும். நீர்மின்சாரத்திலிருந்து தற்போது மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதால் மக்களுக்கு இந்த நிவாரணத்தை வழங்க முடிந்துள்து.

கடந்த ஆண்டுகளில்,இக்காலப்பகுதியில் இதுபோன்ற மழை எமக்கு கிடைக்கவில்லை, ஆனால்,இன்றைய நாட்களில் மழையின் அளவு தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## கடத்தப்படவிருந்த...

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அடுத்த வேதாளை கடற்கரையிலிருந்து நாட்டுப்படகில் இவை, இலங்கைக்கு கடத்தப்படவிருந்தன. இதன் மொத்த பெறுதி இந்திய ரூபாவில் எட்டு இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது. மாத்திரைகள் என்ற போர்வையில் இவை, இலங்கையில் விற்கப்படவிருந்ததாக கைதானவர்களிடம் நடத்திய விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## கந்தக்காடு கைதிகள் தப்பிச்சென்ற...

குழுவினருக்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார். கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்து தப்பிச்சென்ற கைதிகளில், மீண்டும் கைதான 129 பேரிடம் விசாரணை நடத்தப்படுகிறது. இவர்களிடம் பெறப்பட்ட தகவலின் பிரகாரம் ஒன்பது பேரை தேடும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

## இறக்குமதியான 06 மில்லியன்...

இந்நிலையில், சதொச ஊடாக இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை கொள்வனவு செய்யும் வாய்ப்புள்ளதாக கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்துள்ளார்.

சந்தையில் முட்டையின் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு அமைச்சரின் பணிப்புரைக்கு அமைய இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சதொசவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

## வாழ்நாள் சாதனையாளர்...

பல தசாப்த காலமாக பெரும் பங்களிப்பு நல்கி வருகின்ற சிரேஷ்ட ஊடகவியலாளர்களான எம்.ஏ.எம். நிலாம், எஸ். தில்லைநாதன் ஆகிய இருவருக்கும் 'வாழ்நாள் சாதனையாளர்' அதியுயர் விருது வழங்கப்பட்டுள்ளது. தினகரனின் மற்றொரு சிரேஷ்ட பத்திரிகையாளராக விளங்கிய பி. பாலசிங்கம் இவ்விழாவில் விசேட கௌரவ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தினகரனில் அக்காலத்தில் செய்தி ஆசிரியராகப் பணியாற்றிய பாலசிங்கம், லேக்ஹவுஸ் டெய்லி நியூஸ் பத்திரிகையின் இணையாசிரியராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றவராவார். அவர் கொழும்பு பல்கலைக்கழக ஊடகத்துறை டிப்ளோமா கற்கைநெறியின் போதனாசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தமிழ்ப் பத்திரிகைகளின் ஆலோசகராகப் பணியாற்றிய எம்.ஏ.எம். நிலாம் மற்றும் தினகரன் பத்திரிகையின் கரவெட்டி பிரதேச ஊடகவியலாளராக பல தசாப்த காலமாக கடமையாற்றி வருகின்ற எஸ். தில்லைநாதன் ஆகிய இருவரும் நேற்று தினகரன் ஆசிரிய பீடத்துக்கு விசேட விருந்தினர்களாக அழைக்கப்பட்டு பொன்னாடை போர்த்தி, சந்தனமாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். அதன் பின்னர் அவ்விருவரையும் கௌரவிக்கும் வகையில் சிற்றுண்டி விருந்துபசாரமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விருது பெற்ற இவ்விருவருக்கும் தினகரன்/ வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமையில் கௌரவிப்பு விழா நேற்று நடத்தப்பட்டது. மூத்த ஊடகவியலாளர்களான இவ்விருவரும் சுமார் நான்கு தசாப்த காலத்துக்கு மேலாக தினகரனுக்கு வழங்கி வருகின்ற பங்களிப்பு குறித்து தினகரன் ஆசிரியபீடத்தினர் நேற்று பெரிதும் பாராட்டி கருத்துத் தெரிவித்தனர்.

தினகரனுக்கு இவ்விருவரும் வழங்கி வருகின்ற பணி மென்மேலும் தொடர வேண்டுமென்று பிரதம ஆசிரியர் செந்தில்வேலவர் இந்நிகழ்வின் போது கேட்டுக் கொண்டார்.

## கலபொட ஞானிஸ்ஸர தேரரின்...

தேரருக்கு ஆசி வழங்கும் வகையில் இந்தத் தொடர் புண்ணிய நிகழ்வுகள் ஏற்பாடாகியுள்ள தாகவும் அவர் தெரிவித்தார்.

கங்காராம விகாரையின் சிறிய துறவி என பிரபலமடைந்த இவர், நாட்டி ல் பௌத்தத்தின் வளர்ச்சிக்கும் சமூக மற்றும் கலாசார வளர்ச்சிக்கும் பல சேவைகளைச் செய்துள்ளார்.

1943ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ஆம் திகதி மாத்தறை கலபொடவில் பிறந்த ஞானிஸ்ஸர தேரர், 1959ஆம் ஆண்டு தேவுந்தர ரத்னஜோதி தேரரின் போதனையின் கீழ், துறவற வாழ்க்கைக்கு பிரவேசித்தார். மல்வத்து மகா நாயக்க தேரரால் 2003 ஆம் ஆண்டு மேல்மாகாண பிரதம சங்கநாயக்கராக நியமிக்கப்பட்ட கலபொட ஞானிஸ்ஸர தேரர், தமது துறவற வாழ்விலும் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார்.

## துன்புறுத்தல்... (03ஆம் பக்கத் தொடர்)

20,000 க்கும் அதிகம் என புள்ளி விபரங்களை முன்வைத்து அவர் மேலும் தெரிவித்தார். மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் முன் முயற்சியில் 18 துறைகளை மையப்படுத்தி, 13 அமைச்சுக்களின் விடயப் பரப்புடன் சம்பந்தப்பட்ட வகையில் இந்தப் பல்துறை தேசிய செயற்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கின் குரல்

# பொருளாதார வளர்ச்சிக்கான திட்டமிடல்களை பல்கலை சமூகத்தினர் முன்வைக்க வேண்டும்

## தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர்

(ஒலுவில் விசேட நிருபர்)

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டமிடல்களை பல்கலைக்கழக சமூகத்தினர் முன்வைக்க வேண்டுமென, தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் ஏற்பாட்டில் 'விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஊடான பொருளாதார வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி' எனும் தொனிப் பொருளில் பீடாதிபதி கலாநிதி யூ.எல்.அப்துல் மஜீட் தலைமையில் இணையவழியூடான 03வது சர்வதேச ஆய்வரங்கு நேற்று ஒலுவில் வளாகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சியில் ஈடுபடுகின்ற போது நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு எவ்வாறான தீர்வினை வழங்க வேண்டும் என்பது தொடர்பில் ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

பல்கலைக்கழகங்களிலிருந்து புலமைப்பரிசில் பெற்று வெளிநாடுகளுக்கு செல்லுகின்றவர்கள் நாட்டின் பொருளாதார முன்னேற்றம் தொடர்பாக தமது ஆராய்ச்சிகளை முன்னெடுக்க வேண்டும்.

ஆராய்ச்சி என்பது கற்பித்தலில் பிரிக்க முடியாத ஒரு அங்கமாகும், கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளோடு ஆராய்ச்சியும் ஒரு கல்வியாளர்களின் முக்கிய வகிபாகமாகும்.

அதாவது கற்பித்தல் துறையில் நிலைத்து நிற்பதற்கு ஆராய்ச்சியில் தொடர்ச்சியாக ஈடுபடவேண்டும் என்பதோடு கோட்பாடு சம்பந்தமான கல்வியுடன் சேர்த்து ஆராய்ச்சி செய்வதும் அவசியமாகும்.



குறுகிய காலத்திற்குள் தென்கிழக்கு பல்கழைக்கழகம் சர்வதேச ரீதியில் புகழ்பெற்று காணப்படுவதோடு, தொழில்நுட்ப ரீதியிலும் பரிணாம வளர்ச்சி கண்டுவருகிறது. அதிநவீன தொழில்நுட்ப வசதிகள் அதிகரித்துள்ள இக்காலகட்டத்தில் ஆய்வுத் துறைகளும் அதற்கேற்ற வகையில் எதிர்காலத்தில் முன்கொண்டு செல்லப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

பிரதான பேச்சாளர்களாக மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் பேராசிரியர் ஜிஹான் டயஸ் மற்றும் ருஹுணு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் காமினி சேனநாயக்க ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.



புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் கொழும்பு மாநகர உறுப்பினருமான நடராஜா ரவிகுமார் தலைமையிலான குழுவினர் இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனை அவரது மட்டக்களப்பு காரியாலயத்தில் சந்தித்து கலந்துரையாடினர். இதன்போது இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் முனைத்தீவு மக்களின் பிரச்சினைக்கு வெகுவிரைவில் தீர்வை பெற்றுத்தருவதாக தெரிவித்துள்ளார்.

# அக்கரைப்பற்று - பொத்துவில் பிரதான வீதியில் விபத்து

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று பொத்துவில் பிரதான வீதியின் காஞ்சிரன்குடா பகுதியில் நேற்றுமுன்தினம் (12) நண்பகல் வேளையில் இடம்பெற்ற வாகன விபத்தில் பஸ் தரிப்பிடம் சேதமடைந்ததுடன் கெப் ரக வாகனமொன்றும் சேதமடைந்துள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர். வாகன விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மூதூரில் யானைகளின் அட்டகாசத்தால் பல்லின தோட்டப் பயிர்கள் அழிவு

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் பகுதிகளில் வண்ணாங்குழி, நாணல்சேனை மற்றும் இறால்குழி கிராமங்களில் இரவில் அடிக்கடி பிரவேசிக்கும் யானைகள் தென்னை, வாழை, மா உள்ளிட்ட பல்லின மரக்கறிப் பயிர்களை துவம்சம் செய்து வருவதாக தோட்டப் பயிர்ச்செய்கையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் அன்றாட ஜீவனோபாய தொழிலாக இதை செய்துவருவதால் பொருளாதாரரீதியில் பெரும் பின்னடைவை சந்திப்பதாக தெரிவிக்கின்றனர்.

தோட்டக் கிணறுகள், பருவகால மழையையும் நம்பி இத்தொழிலில் பலரும் ஈடுபடுகின்றனர்.

இந்நிலையில் காட்டு யானைகள் மாலை நேரங்களில் பண்வெட்டான், பால்துறையை அண்டிய நன்னிக்காடுகளிலிருந்து இறால்குழி ஆற்றை கடந்து வந்து தோட்ட வேலிகளை உடைத்து இப்பயிரினங்களுக்கு பெரும் அழிவை ஏற்படுத்தி வருவதாகவும் கவலை தெரிவிகின்றனர்.

# இலங்கை – மாலைதீவு பாராளுமன்ற நட்புறவு சங்க தலைவராக முஷாரப் எம்.பி தெரிவு

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

இலங்கை மாலைதீவு பாராளுமன்ற நட்புறவுச்சங்கத்தின் தலைவராக திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இலங்கை மாலைதீவு பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் ஒன்பதாவது பாராளுமன்ற செயற்குழு உறுப்பினர்களை தெரிவு செய்யும் கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.



இலங்கைக்கான மாலைதீவு பிரதி உயர்ஸ்தானிகர் பாத்திமா ஜீனா இந்நிகழ்வில் விசேட விருந்தினராகக் கலந்து கொண்டிருந்ததுடன், பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர்களான பைஸல் காசிம், ராஜிகா விக்ரமசிங்க, சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் நட்புறவுச் சங்கத்தின் உப தலைவர்களாக தெரிவு செய்யப்பட்டனர். பாராளுமன்ற உறுப்பினர் மேஜர் சுதர்ஷன தெனிபிடிய செயலாளராகவும், செல்வம் அடைக்கலநாதன் உதவிச் செயலாளராகவும், இஷாக் ரஹுமான் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# சட்டவிரோத தெருவோர கடைகள் சுற்றிவளைப்பு

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பிரதேசத்தில் சட்டவிரோத தெருவோர கடைகள் சுற்றிவளைக்கப்பட்டு வியாபாரிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுகாதாரத்துக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் தெருவோர வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த வியாபாரிகள் மீது மட்டக்களப்பு பொது சுகாதார பரிசோதகர்களால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் உத்தரவின் பேரில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் வழிகாட்டலில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். வியாபாரிகள் மீது மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் பொதுச்சுகாதார பரிசோதகர்களால் வழக்கு தொடரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட கல்லடி, அரசடி உட்பட பல பிரதேசங்களில் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட கண்ணகிபுரம் மகா வித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் முதல் தடவையாக மேரி டுலுக்சிக்கா றொசேரோ என்ற மாணவி 9 ஏ சித்திகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை தேடிக் கொடுத்துள்ளார். இவரை கௌரவிக்கும் நிகழ்வு கவடாப்பிட்டி கிராமத்தில், லக்சுமி கரங்கள் அமைப்பினால் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், நப்சோ நிறுவனத்தின் பிரதானி கோகுலன், பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் உட்பட பிரதேச நலன் விரும்பிகளும் கலந்து கொண்டனர்.

(படம்; மாளிகைக்காடு குறூப், அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்கள்)

## பாலமுனை அல்ஹிதாயா மகளிர் கல்லூரி

# அபிவிருத்திக்குழு - முஷாரப் எம்.பி இடையில் கலந்துரையாடல்



(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

பாலமுனை அல்ஹிதாயா மகளிர் கல்லூரியின் கல்வி அபிவிருத்தி மற்றும் பாடசாலையின் பௌதீக வள அபிவிருத்தி தொடர்பாக பாடசாலை அபிவிருத்திக் குழுவுக்கும் பாராளுமன்ற உறுப்பினர், சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப்புக்குமிடையிலான விசேட சந்திப்பொன்று பாராளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் நடைபெற்றது. பாராளுமன்ற உறுப்பினரின் பாலமுனை இணைப்பாளரும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருமான பீ.எம்.ஹுசையிறின் ஏற்பாட்டில் நடைபெற்ற இச்சந்திப்பில் பாடசாலையின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டதுடன் மாணவர்கள் தற்பொழுது எதிர்நோக்கி வருகின்ற பௌதீக வளப்பற்றாக்குறையை செய்துதருவதாகவும் இதன்போது உறுதியளித்திருந்தார்.

# ஆனைகட்டியவெளியில் செத்தல் மிளகாய் அறுவடை விழா

(காரைதீவு குறூப் நிருபர்)



விவசாய திணைக்களத்தினால் முன்மாதிரி துண்டச் செய்கைக்காக வழங்கப்பட்ட கலப்பின செத்தல் மிளகாய் செய்கையின் அறுவடை விழா றாணமடு விவசாய போதனாசிரியர் பிரிவுகளுக்குட்பட்ட ஆனைகட்டியவெளி கிராமத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

றாணமடு விவசாய போதனாசிரியர் பிரிவுக்கு பொறுப்பான தொழில்நுட்ப உத்தியோகத்தர் கே.கிலசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் வீ.பேரின்பராஜா தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர் எஸ். சித்திரவேல் விவசாய பயிலுனர்கள் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

*MICH Hybrid 1* எனும் மிளகாய் வர்க்கம் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு செத்தல் மிளகாய் உற்பத்தியை ஊக்குவிக்கும் செயற்றிட்டத்தின் ஒரு அங்கமாக நடைபெற்றுவருகின்றது. மிளகாய் செய்கையில் ஏற்பட்ட நோய் பீடை தாக்கங்கள் பற்றியும் இதன்போது தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டன. மேலும் பூச்சித் தாக்கத்தை கட்டுப்படுத்தக்கூடிய *Insect Proof Net* மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தால் மானியமாக விவசாயிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.



மூதூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட 7914 குடும்பங்களுக்கு உலக உணவுத்திட்டத்தின் கீழ் உலருணவுப்பொருட்கள் வழங்கப்பட்டுவருவதாக மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாறக் தெரிவித்தார். 42 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவுப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

(படம்; தோப்பூர் தினகரன் நிருபர்)


## அறிவித்தல்

**டெஸ் அக்ரோ பிஎல்சி நிறுவனத்தின் வாக்குரிமை உடைய மற்றும் வாக்குரிமை அற்ற பங்குதாரர்களின் அதிவிசேட பொதுக்கூட்டம் தொடர்பான அறிவித்தல்.**

அதிவிசேட பொதுக்கூட்டம் மெய்நிகர் சந்திப்பாக 2023 டிசம்பர் 28ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு நடைபெறும் என்பது தொடர்பில், நிறுவனத்தின் வாக்குரிமை உடைய மற்றும் வாக்குரிமை அற்ற பங்குதாரர்களுக்கு இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது. டெஸ் அக்ரோ பிஎல்சி, இல. 87, நியு நுகே வீதி, களனி எனும் முகவரியிலிருந்து இந்த சந்திப்பு முன்னெடுக்கப்படவுள்ளதுடன், இதன் போது, பின்வரும் சாதாரண தீர்மானங்கள் தொடர்பில் திருத்தங்களுடன் அல்லது திருத்தங்களின்றி அனுதியைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது:

**இத்தால் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளமையானது,**

**தீர்மானம் 1**

பணிப்பாளர் சபையினால் 169,265,762 சாதாரண வாக்குரிமை பங்குகளை, பங்குதாரர்கள் பதிவேட்டின் பிரகாரம், ஏற்கனவே நிறுவனத்தின் சாதாரண வாக்குரிமை பங்குகளை கொண்டிருக்கும் வாடிக்கையாளர்களுக்கு 2024 ஜனவரி 3ஆம் திகதி பங்குப் பரிவர்த்தனை முடிவடையும் போது ஒதுக்கீடு செய்வது (இந்த சந்திப்பு நடைபெறும் தினத்திலிருந்து மூன்றாவது பங்குச்சந்தை செயற்பாடுகள் நடைபெறும் தினம்)

**தீர்மானம் 2**

பணிப்பாளர் சபையினால் 16,666,667 சாதாரண வாக்குரிமையற்ற பங்குகளை, பங்குதாரர்கள் பதிவேட்டின் பிரகாரம், ஏற்கனவே நிறுவனத்தின் சாதாரண வாக்குரிமையற்ற பங்குகளை கொண்டிருக்கும் வாடிக்கையாளர்களுக்கு 2024 ஜனவரி 3ஆம் திகதி பங்குப் பரிவர்த்தனை முடிவடையும் போது ஒதுக்கீடு செய்வது (இந்த சந்திப்பு நடைபெறும் தினத்திலிருந்து மூன்றாவது பங்குச்சந்தை செயற்பாடுகள் நடைபெறும் தினம்)

டெஸ் அக்ரோ பிஎல்சி பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் பிரெஸ்டிஜ் செயலாளர்கள் மற்றும் ஆலோசகர்கள், கூட்டாண்மை செயலாளர்களின் ஆணையின் பிரகாரம்.

2023 டிசம்பம் 5ஆம் திகதி.

**டெஸ் அக்ரோ பிஎல்சி**
(PB 689 PQ)
இல. 87, நியு நுகே வீதி, யுகளனி



## சேல் சேல் சேல்

**கையிருப்பை விற்றுத் தீர்த்தல்**

| | | | |
|---|---|---|---|
| 60’ பொலியெஸ்டர் துணி | | | |
| Printed & Plain | 05 மீற்றர் | ரூபா | 2,000.00 |
| 60’ லேஸ் | 05 மீற்றர் | ரூபா | 2,000.00 |
| வெள்ளை சேர்ட் பட்டன் | 01 கி.கி. | ரூபா | 250.00 |
| புளொட்டர் பேப்பர் | 01 கி.கி. | ரூபா | 1,000.00 |
| பேப்பர் இன்டர்லைனிங் | | | |
| கறுப்பு வெள்ளை | 01 யார் | ரூபா | 100.00 |
| Boys Shirt | 01 துண்டு | ரூபா | 250.00 |

சில்லறை மற்றும் மொத்த விற்பனை அனைத்து வாடிக்கையாளர்களும் வரவேற்கப்படுகின்றனர்.

**“விலைக்குறைப்பு சேல்” இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு**

**2023 டிசம்பர் 11ஆம் திகதி முதல்**
**2023 டிசம்பர் 21ஆம் திகதி வரை**

**எமது தொழிற்சாலை:**
**ஜனதா கார்மன்ட்ஸ் (பிரைவட்) லிமிடெட்,**
**இல. 17,**
**விவேகானந்த மேடு, கொழும்பு-13.**



ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய் 2023.12.12
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5326 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,091,784.00
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 6 7 3 4 8 2

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3568 — சீட்டிழுப்பு திகதி 2023.12.12 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 70,161,630.00
ஆங்கில எழுத்து O — வெற்றி இலக்கங்கள் 58 65 70 73 — விசேட எழுத்து O — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 38989

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1674 — 2023.12.12 — 45277 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 417,589,828.00
ஆங்கில எழுத்து K — சுப்பர் இலக்கம் 01 — வெற்றி இலக்கங்கள் 10 13 38 77
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP — திகதி 2023.12.12 — சீட்டிழுப்பு இலக்கம் 0152
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 1 2 0 6 4 8 — L7 எழுத்து U
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.21,362,099.48

ராசி சுப பலன் — திகதி 2023.12.12 — சீட்டிழுப்பு இலக்கம் 635 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 4,424,984.20
வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 21 32 48 54 — தனயோக இலக்கம் 20996 — நாளுக்கான விதி எண் 25

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1356 — 2023.12.12 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 124,826,914.80
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 06 17 48 80 — விசேட எழுத்து G — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 13563

## சமூக சேவைகளுக்காக 'ஆசியன் விருது' பெற்று...

# இலங்கை மண்ணுக்கு பெருமை சேர்த்த YMMA தேசிய தலைவர் இஹ்ஸான் ஏ ஹமீட்




இந்தியாவிலுள்ள உலக ஆராய்ச்சி காங்கிரஸின் நிர்வாக குழுவினால் சர்வதேச தலைமைத்துவ விருது வழங்கும் நிகழ்வில் இம்முறை ஆசியாவின் சிறந்த சமூக சேவையாளருக்கான விசேட விருது 'ஆசியன் விருது' க்கு அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் இஹ்ஸான் ஏ ஹமீட் தெரிவு செய்யப்பட்டார். இவருக்கான விருது அண்மையில் இந்தியாவில் இடம்பெற்ற விருது வழங்கும் வைபவத்தின்போது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் இஹ்ஸான் ஹமீடின் சமூகப் பணி அளப்பரியது. அவர் தான் சார்ந்துள்ள அமைப்பின் பிரதிநிதியாக நின்று அவர் இளைஞர் சமூகத்திற்கு ஆற்றி வரும் பங்களிப்பு மிகவும் சாலச்சிறந்ததாகும். அவ்வாறு தம் சொந்த வேலைகளைக் கூட கவனத்திற் கொள்ளாது எமது எதிர்கால இளம் சந்ததியினர்களின் மீது அவர் கொண்டுள்ள அதீத பற்றினை நேரடியாக அறிந்து கொள்ளக் கூடிய வகையில் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள வை. எம். எம். ஏ. கிளையின் வாயிலாக தன்னுடைய வழிகாட்டலுடன் சற்றும் தளராத உறுதியுடனும் எதிர்கால சிந்தனை நோக்குடனும் அவர் செயற்பட்டு வந்தமைக்கு சான்றாக இந்தியாவில் அவரை கௌரவித்து வழங்கப்பட்டுள்ள 'ஆசியன் விருது' அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவைக்கும் இலங்கை மண்ணுக்கும் பெரும் பெருமையைத் தேடித் தந்துள்ளது.



சமூகப் பணிக்காக எது வித தடங்களோ பின்னடைவோ இன்றித் தொடர்ச்சியாக அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் அங்கத்தவராக இணைந்து தொடர்ச்சியாக பதவி உயர்வுகளைப் பெற்று இறுதியாக அதன் தேசியத் தலைவராக செயலாற்றுவது அவருடைய ஆளுமைக்கு கிடைத்த வெற்றியாகும்.

இலங்கையின் தலைநகரில் இருந்து 230 கிலோமீட்டர் தொலைவில் உள்ள உலகப்புகழ்பெற்ற இலங்கையின் இயற்கை எழில் கொஞ்சும் துன்ஹிந்த நீர்வீழ்ச்சி அமைந்துள்ள மத்திய மலைப்பகுதியான பதுளை நகரத்தில் நடுத்தர வருமானம் கொண்ட குடும்பத்தில் பிறந்தவரே இஹ்ஸான் ஏ. ஹமீட்.

இவர் தந்தை ஜவாஹிர் ஹமீட், தாயார் மர்ஹூம் நயீமா ஜமால்தீன். இவருக்கு இரு உடன்பிறந்த சகோதரர்கள் உள்ளனர். இவரது சகோதரர் இம்திகாப் ஏ. ஹமீட் ஆவார், அதில் இரண்டாவது இஹ்சான் ஏ. ஹமீட். 1975.05.03ஆம் திகதி பிறந்த இவர், காலியைச் சேர்ந்த திருமதி சித்தி மிஸ்ஜா என்ற பெண்மணியினை திருமணம் செய்து கொண்டார். இவருக்கு ஐந்து பிள்ளைகள் உள்ளனர். வாழ்க்கையில் இந்த நிலைக்கு உயர்வதற்கு தனது துணைவியார் செய்த தியாகங்களே காரணமென தெரிவிக்கும் அவர், துணைவியாரை மறக்க முடியாது என விசேடமாக குறிப்பிட்டுள்ளார்.







இஹ்சான் ஹமீட், தனது கல்லூரிப் படிப்பை முடித்த பிறகு, விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் வாழ்வைத் தொடங்கினார். இலங்கையில் CIM இன் முதல் பட்டத்தை மேற்கொண்டார். தற்போது அவர் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தில் உதைபந்தாட்ட சங்கத்தின் தற்போது உப தலைவராகவும் முன்னர் கல்லூரி பழைய மாணவர்கள் சங்கத்தின் உதவிப் பொருளாளராகவும் கடமையாற்றியுள்ளார். அவர் பள்ளிக் கூடத்தில் படிக்கும் காலத்திலிருந்தே தம் சகோதரர்களுக்கு மனிதாபிமான உதவி செய்து வந்தார். அதேவேளையில் இவர் சமூகப் பணியில் மிகுந்த ஆர்வம் உடையவர்.

விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் நீண்ட காலமாக ஈடுபட்டு வந்த இவர், அத்துறையில் அனுபவத்தையும் நற்பெயரையும் பெற்றுக் கொண்டு பதுளையில் சொந்த விநியோக மற்றும் விற்பனையாளர் நிறுவனமான HNR Trading கம்பனியை ஆரம்பித்தார், அதில் அவர் முகாமைத்துவப் பணிப்பாளராக இருக்கின்றார்.

1992 ஆம் ஆண்டு YMMA பதுளை கிளையின் செயற்குழு உறுப்பினராக இணைந்து கொண்ட இவர், இவ்வமைப்பின் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு மிகுந்த பக்கபலமாக இருந்தார். அவருடைய கடின உழைப்பு மற்றும் நம்பிக்கையினால் 2008 ஆம் ஆண்டு பதுளை YMMA கிளையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். பதுளை YMMA இன் தலைவராக இருந்து, உள்ளக பூப்பந்தாட்ட மைதானத்தை நிர்மாணிப்பதற்காக நலன் விரும்பிகளின் ஆதரவுடன், செயற்பட்டார். இதன் மூலம் நிரந்தர வருமானமாக கிளைக்கு 60,000.00 முதல் 80,000.00 வரை இன்று கிடைத்து வருகின்றமை இது இவருடைய அயராத முயற்சியாகும்.

2009 முதல் 2011 வரை, கிளையின் முன்னாள் தலைவராகவும், அறங்காவலர் குழு உறுப்பினராகவும் இருந்தார். 2012 இல், குழு உறுப்பினர்களின் அதிக ஆதரவுடன், அவர் கிளையின் பொருளாளராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். மற்றும் (ACYMMAC) வருடாந்த மாநாட்டின் மூலம், இலங்கை முழுவதும் 100 க்கும் மேற்பட்ட கிளைகளின் பங்கேற்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த பொருளாளர் என்கின்ற தேசிய விருதுதையும் இவர் பெற்றுக்கொண்டார்.

2013 ஆம் ஆண்டு பதுளை கிளையின் பொதுச் செயலாளராகவும், 2015 ஆம் ஆண்டு பதுளை YMMA கிளையின் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார். இலங்கை முழுவதும் உள்ள 115க்கும் மேற்பட்ட கிளைகளின் பங்கேற்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டில் சிறந்த தலைவருக்கான தேசிய விருது இவருக்கு வழங்கப்பட்டது

2016 இல் அமைப்பின் இளைஞர் அதிகாரமளிக்கும் திட்டத் தலைவராக இருந்தார். 2017, 2018, 2019 ஆகிய வருடங்களில் விளையாட்டுத் துறைத்தலைவராகவும் கடமையாற்றினார். அவர் அக்கிளைகளுக்கிடையே கால்பந்து போட்டியை அறிமுகப்படுத்தி ஒவ்வொரு வருடமும் கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் சவால் கிண்ணப் போட்டியை நடத்த உந்து சக்தியாக இருந்து வருகின்றார். கிளைகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டியினை அறிமுகப்படுத்தியமையால் இளைஞர்களுடைய மனதில் மிக இலகுவாக இடம்பிடித்துக் கொண்டவர். இவரின் விளையாட்டுத் துறையின் முயற்சியினால் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள வை. எம். எம். ஏ கிளைகளுக்கிடையே நட்புறவு வலுப்பெற்றன. அத்துடன் பதுளையில் வை. எம். ஜீ. ஏ. கிளை ஒன்றை ஸ்தாபித்து அவற்றின் மேம்பாட்டுக்கான வேலைத் திட்டங்களை தற்போது முன்னெடுத்து வருகிறார்.

2020 ஆம் ஆண்டு, தேசிய பொருளாளர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 2021 ஆம் ஆண்டு அமைப்பின் துணைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அகில இலங்கை இளைஞர் முஸ்லீம் சம்மேளன மாநாடு ஒரு தேசிய இளைஞர் மற்றும் இளைஞர் சேவை சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்பாகும், இது ஒரு வலுவான சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தை கட்டியெழுப்புவதற்கும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் சேவை செய்வதற்கும் தலைமைத்துவத்தை வழங்குகிறது.

நாடு முழுவதும் 10,000 க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளனர். நாடளாவிய ரீதியில் 175 மேற்பட்ட YMMA கிளைகள் உள்ளன. எல்லாக் கிளைகளுக்கிடையே வலைப்பின்னல் அமைந்துள்ளது. இவ்வமைப்பு 30 ஏப்ரல் 1950 இல் காலஞ்சென்ற கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட இலாப நோக்கற்ற, அரசியல் சார்பற்ற தொண்டு நிறுவனமாக 1968 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஒரு ஒருங்கிணைந்த அமைப்பாகும். கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸ், கல்வியாளர், முதல் முஸ்லிம் அரசு நிர்வாகி. மற்றும் முன்னாள் செனட்டர் ஆவார்.

அகில இலங்கை YMMA மாநாட்டின் (ACYMMAC) பார்வையானது துடிப்பான தேசிய இளைஞர் மற்றும் இளைஞர் சேவை சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்பாகும், இது ஒரு வலுவான சமூக, பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தை கட்டியெழுப்புவதற்கும், சலுகைகள் மற்றும் சமூகத்திற்கு சேவை வழங்குவதற்கும் தலைமைத்துவத்தை வழங்குவதாகும்.

(ACYMMAC) இன் நோக்கம், சமூகத்திற்கு நேரடியாகவோ அல்லது உறுப்பினர் YMMAகளின் மூலமாகவோ சமூகத்திற்கு சிறந்த சேவையை வழங்குவதாகும். இளைஞர்களின் பொருளாதாரத் தரத்தை உயர்த்துதல்,



வறுமையை ஒழித்தல், பயிற்சிகள் வழங்குதல் இளைஞர்களை வழிநடத்துதல் ஆகியவற்றின் நோக்கத்துடன் நிறுவனங்களின் வளங்களைத் திரட்டுதல். கல்வியை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்ட நல்ல குடிமகன் மற்றும் சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில், சமூக நீதி மற்றும் இனங்களுக்கிடையிலான நல்லுறவை மேம்படுத்துவதில் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதல் போன்ற பணிகளில்இவ்வமைப்பு ஈடுபட்டு வருகின்றன.

இன்று அந்த அமைப்பின் தேசியத் தலைவர் என்ற முறையில், அவர் சமூகத்தின் தேவையறிந்து விழிப்புணர்வூட்டுதல் உள்ளிட்ட பல்வேறுபட்ட பின்வரும் திட்டங்களை ஆரம்பித்து வைத்து செயலாற்றி வருகின்



றார்.

இவைதவிர, பதுளை மஸ்ஜிதுல் அப்றார் (ஹைராத்) அறங்காவலர் சபையின் தலைவர், கடந்த 16 வருடங்களாக சேவையாற்றியவர். 2007இல் முதல் பதுளைப் பிட்டிய ஜனாஸா நலன்புரிச் சங்கத்தின் உப தலைவர், பைத்துஸ் ஸகாத் நிதியத்தின் பொருளாளர், பதுளை நகர் ஊவா முஸ்லிம் கல்வி அபிவிருத்தி சங்கம் எனச் சமூக சேவகத் துறையில் சமூகத்திற்கு மிகவும் மகத்தான பங்களிப்புக்களை வழங்கியுள்ளார். மூன்று தசாப்தங்களுக்கு மேலாக சமூகப் பணிகளில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியமைக்காக உலகப் புகழ்மிக்க விருதுகைளையும் பாராட்டுக்களையும் தனதாக்கிக் கொண்டவராகின்றார்.

இவர் மிகவும் பெருமதிப்புமிக்க விருதுகள், மனித உரிமைகள் அமைப்பிலிருந்து 2017 ஆம் ஆண்டில் 'தேசகீர்த்தி' விருதினையும்,2018 ஆம் ஆண்டில் 'சாமஸ்ரீ ' விருதினையும் அம்பாறை மாவட்ட முஸ்லிம் லீக்கினால் 'ஹபீபுல் இன்சானி' விருது போன்ற சிறப்புமிக்க விருதுகளையும் பெற்றவர்.

**இக்பால் அலி**



## கொழும்பு இந்துக் கல்லூரியின்

# இளம் கிரிக்கெட் வீரர் ரிஷியுதனுக்கு கனடிய தமிழ் காங்கிரஸ் ஆதரவு

கொழும்பு இந்துக் கல்லூரியின் வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரரான 10 வயது ரிஷியுதனின் குறிப்பிடத்தக்க திறமைக்கு கனடிய தமிழ் காங்கிரஸ் (CTC) தமது ஆதரவை வழங்குவதாக அறிவிதுள்ளது . சமீபத்தில் நடந்த பாடசாலை மட்டத்திலான கிரிக்கெட் போட்டியில், ரிஷியுதன் 9.4 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டம் கூட விட்டுக்கொடுக்காமல் 8 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்தார் .

இச்சாதனையைப் பாராட்டுவதற்காக, கனடிய தமிழ் காங்கிரஸ் முன்னாள் தலைவரும் தற்போதைய ஆலோசகருமான ராஜ் தவரட்ணசிங்கம் நேற்றுமுன்தினம் 12 ஆம் திகதி ரிஷியுதனின் இல்லத்திற்கு நேரில் சென்று வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், கிரிக்கெட் மீதான அவரது ஆர்வத்திற்கு கனடிய தமிழ் காங்கிரஸ் உதவி செய்யும் எனவும் தெரிவித்தார்

இதன் போது ரிஷியுதனின் குடும்பத்தின்



வேண்டுகோளுக்கு இணங்க கனடிய தமிழ்க் காங்கிரஸ், அக்குடும்பத்தின் வாழ்வாதாரத்திற்கு அத்தியாவசியமான முச்சக்கர வண்டியின் குத்தகையை முழுமையாகச் செலுத்தியது. இது அவர்களின் நிதிச்சுமைகளைத் குறைப்பதுடன், ரிஷியுதனின் கிரிக்கெட் கன



வுகளை அடைவதற்கு ஆதரவான சூழலை ஏற்படுத்தும்.

19 வயதில் இலங்கை தேசிய அணிக்காக விளையாடும் ரிஷியுதனின் கனவுக்கு கனேடிய தமிழ் காங்கிரஸ் ஆதரவளிக்கும் என ராஜ் தவரட்ணசிங்கம் ரிஷியுதனின் பெற்றோரிடம் உறுதியளித்தார்.

கனேடிய தமிழ்க் காங்கிரஸ், தமிழ்ச் சமூகத்தில் உள்ள திறமைகளை வளர்ப்பதில் அதன் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. அத்துடன் கலாசார பெருமை மற்றும் ஒற்றுமையை மேம்படுத்துவதில் விளையாட்டுகளின் முக்கிய பங்கை ஒப்புக்கொள்கிறது. ரிஷியுதன் போன்ற இளம் திறமையாளர்களின் கனவுகளை வளர்ப்பதில் அதன் அர்ப்பணிப்பை வலியுறுத்தி, கனடாவில் உள்ள தமிழ் சமூகத்தின் தொடர்ச்சியான ஆதரவுக்காக இந்த அமைப்பு நன்றி தெரிவிக்கிறது.

## வடக்கின் உதயம்

யாழ்ப்பாணத்தில்

# சீனியை பதுக்குவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

*யாழ். விசேட நிருபர்*



யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கடைகளில் சீனியை பதுக்கி வைத்திருப்போருக்கு எதிராக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென, அம்மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்துக்கு 100 மெற்றிக்தொன் சீனி, கூட்டுறவு சமாசத்தினூடாக கிடைத்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாயினும், இது தொடர்பாக உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்த முடியவில்லை. இந்நிலையில் சீனியை பதுக்கி வைத்து, செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்த சிலர் முனைவதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளது. இவ்வாறானவர்களுக்கு எதிராக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, சீனிக்கான கட்டுப்பாட்டு விலையை மீறி விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுவதுடன், இதற்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணத்தில் சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்ததின நிகழ்வு



மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 141ஆவது பிறந்த தினமான டிசெம்பர் 11ஆம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகத்தில் நிகழ்வொன்று நடைபெற்றது.

இந்நிகழ்வின் போது சுப்பிரமணிய பாரதியாரின் உருவப்படத்துக்கு இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் மலர்மாலை அணிவித்து சிறப்பித்ததுடன், தூதரக அதிகாரிகளும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## புத்தூரில் வாளுடன் நின்றவர் கைது

*கரவெட்டி தினகரன் நிருபர்*

யாழ்ப்பாணம், புத்தூர் சந்தியில் வாளுடன் நின்ற 27 வயதுடைய இளைஞர் ஒருவரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (12) இரவு காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் கைது செய்ததுடன், இவரிடமிருந்து வாளையும் கைப்பற்றினர். ஆவரங்கால் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞரையே கைது செய்ததாக, பொலிஸார் தெரிவித்தனர்.

திருட்டுச் சம்பவமொன்று தொடர்பான விசாரணைக்கு தாம் சென்ற போது, வாளுடன் நின்ற இச்சந்தேக நபரை அவதானித்ததாகவும் பின்னர், சந்தேக நபரைக் கைது செய்து விசாரணை நடத்தி வருவதாகவும், பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# வெண்முதுகு தாவரத்தத்தி தாக்கம்; உயிலங்குளத்தில் கலந்துரையாடல்

## விவசாயிகளுக்கு தெளிவுபடுத்தல்

*மன்னார் குறுப் நிருபர்*



வடமாகாணத்தில் செய்கை பண்ணப்பட்டுள்ள நெற்பயிர்களில் பரவியுள்ள பாரிய நோய் தாக்கமான வெண்முதுகு தாவரத்தத்தி தாக்கம் தொடர்பாக மன்னார் மாவட்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தும் விசேட கலந்துரையாடல் உயிலங்குளத்திலுள்ள கட்டுக்கரைக்குள திட்ட முகாமைத்துவக் குழுவின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (12) நடைபெற்றது.

வடபிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலைய உதவிப் பணிப்பாளர் எஸ்.ராஜேஷ் கண்ணா தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றதுடன், இதில் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்த நோய் தாக்கத்தின் பாதிப்பு மற்றும் அதைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறை, பாவிக்கப்பட வேண்டிய மருந்து தொடர்பாக விளக்கமளிக்கப் பட்டது

வடமாகாணத்தின் 5 மாவட்டங்களில் வெண்முதுகு தாவரத்தத்தி தாக்கம் காணப்படுவதாக, வடபிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலைய உதவிப் பணிப்பாளர் எஸ். ராஜேஷ் கண்ணா தெரிவித்தார்.

வெண்முதுகு தாவரத்தத்தி தாக்கத்தால் யாழ்ப்பாணத்தில் 5 ஆயிரம் ஹெக்டேயரிலும் கிளிநொச்சியில் 800 ஹெக்டேயரிலும் முல்லைத்தீவில் 650 ஹெக்டேயரிலும் வவுனியாவில் 700 ஹெக்டேயரிலுமான நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

# உரிய நேர அட்டவணையை நடைமுறைப்படுத்த கோரி முல்லை. இ.போ.ச ஊழியர்கள் போராட்டம்

*மாங்குளம் குறுப், ஓமந்தை விசேட நிருபர்கள்*



உரிய நேர அட்டவணையை நடைமுறைப்படுத்தக் கோரி முல்லைத்தீவு இலங்கை போக்குவரத்து சபை சாலை ஊழியர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (12) மாலை வேலைநிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற இ.போ.ச. பேருந்தை தேராவில் பிரதேசத்தில் இடைமறித்த தனியார் பேருந்து சாரதிகளும் நடத்துநர்களும், இ.போ.ச. பேருந்து சாரதி மற்றும் நடத்துநர் மீது தாக்குதல் நடத்திய போது, நடத்துநர் காயமடைந்து முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

உரிய நேர அட்டவணையை நடைமுறைப்படுத்தாமையே முரண்பாட்டுக்கு காரணமென்பதுடன், உரிய நேர அட்டவணையை பங்கீட்டு நியதிச் சட்டத்தின் அடிப்படையில் 60:40 என்ற விகிதத்தில் நடைமுறைப்படுத்தி தமது சேவையை உரிய முறையில் முன்னெடுக்க ஒத்துழைக்குமாறு, முல்லைத்தீவு இ.போ.ச. சாலை ஊழியர்கள் தெரிவித்தனர்.

# யாழ்ப்பாணத்தில் புளியமரக் கன்றுகளை நடுவதற்கு பணிப்பு

*யாழ். விசேட நிருபர்*

யாழ்ப்பாண மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் புளியமரக் கன்றுகளை நடுமாறு பிரதேச செயலாளர்களுக்கு அம்மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் பணித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இதனைத் தெரிவித்தார். எதிர்காலத்தில் பழப்புளிக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்படும். தற்போது புளியமரக் கன்றுகளை நாட்டினால் இன்னும் 10, 15 வருடங்களில் பழப்புளிக்கு தட்டுப்பாடு ஏற்படாதெனவும், அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு உரித்தான பாரம்பரிய பழ மரங்கள் வெட்டப்படுகின்றன. மா, பலா போன்ற மரங்கள் வெட்டப்படுவதுடன், இது தொடர்பாக எதிர்காலத்தில் கவனம் செலுத்தப்படும். பாரம்பரிய பழ மரங்களை பாதுகாக்க வேண்டியுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# சாளம்பைக்குளத்தில் இரு பாடசாலைகளில் திருட்டு

*வவுனியா விசேட நிருபர்*

வவுனியா, சாளம்பைக்குளம் பிரதேசத்திலுள்ள இரண்டு பாடசாலைகளில் அண்மையில் திருட்டுப் போயுள்ளதாக, பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

அல் அக்ஸா பாடசாலை மற்றும் ஆயிசா பாடசாலைகளின் கதவுகளை திருடர்கள் உடைத்து திருட்டை புரிந்துள்ளதாகவும் பாடசாலைகளிலிருந்த மோட்டார்கள், மின் விசிறிகள் உள்ளிட்ட பொருட்களை இவர்கள் திருடியுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பூவரசன்குளம் பொலிஸாரிடம் பாடசாலை அதிபர் மற்றும் பாடசாலை நிர்வாகத்தினர் முறைப்பாடு செய்துள்ளனர்.

## மலைச்சாரல்



# இரத்தினபுரியில் 9 இடங்களில் மண்சரிவு அபாய எச்சரிக்கை

*பலாங்கொடை தினகரன் நிருபர்*



தற்போது நிலவும் சீரற்ற கால நிலையைத் தொடர்ந்து அதிகளவான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ள நிலையில், இரத்தினபுரி மாவட்டத்தின் ஒன்பது பிரதேச செயலகப் பிரிவுகளில் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் இரத்தினபுரி மாவட்ட பொறியியலாளர் அபித்த வனசுந்தர தெரிவித்தார்.

இதற்கமைய, பலாங்கொடை மற்றும் இம்புல்பே பிரதேச செயலகப் பிரிவுகளில் மண்சரிவு அபாய எச்சரிக்கை இரண்டாவது தடவையாக விடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

அத்துடன் ஒப்பனாயக, வெலிகேபொல, கலவான, எலபாத, எஹலியகொடை, கிரியெல்ல, குருவிட்ட ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் முதல் தடவையாக தற்போது மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

மாலை வேளைகளில் அடைமழை பெய்து வருவதால், மண்மேடு உள்ள இடங்களில் மண்சரிவு அபாயம் அதிகளவில் உள்ளதாகத் தெரிவித்த அவர், அவ்வாறான இடங்களில் வசிக்கும் பொதுமக்களை மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும் ஆலோசனை வழங்கினார்.

ஆபத்தான மரங்களை அகற்றும் பணி

# தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன்

*மாத்தளை சுழற்சி நிருபர்*



வீதியோரங்களிலுள்ள ஆபத்தான மரங்களை இனங்கண்டு, அவற்றை வெட்டி அகற்றும் பணியை முன்னெடுப்பதற்கு அரசினால் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

மாத்தளை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்த போது,

"இந்த வருடத்தில் மரங்கள் முறிந்து விழுந்ததிலும் மரக்கிளைகள் உடைந்து விழுந்ததிலும் இதுவரை எட்டு பேர் உயிரிழந்துள்ளதுடன், பெறுமதியான வாகனங்கள் மற்றும் சொத்துகளுக்கும் பலத்த நட்டம் ஏற்பட்டுள்ளது. ஆகையால், இதைக் கவனத்திற்கொண்டு வீதியோரங்களிலுள்ள ஆபத்தான மரங்களை வெட்டி அகற்றுவதற்கான பணியை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்திடம் ஒப்படைத்து உள்ளூராட்சி மன்றங்களினூடாக இந்த நடவடிக்கை செயற்படுத்தப்படவுள்ளது. இதற்கான பயிற்சி மற்றும் உபகரணங்கள் அரசினால் பெற்றுக்கொடுக்கப்படும்.

நாடளாவிய ரீதியில் பிரதான நகரங்கள் மற்றும் வீதிகளின் இரு மருங்கிலும் சுமார் ஒரு இலட்சம் மரங்கள் உள்ளதுடன், இவற்றில் 300 மரங்கள் ஆபத்தான கட்டத்திலுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபைப் பிரிவில் மாத்திரம் ஆபத்தான 300 மரங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இவ்வாறான மரங்கள் யாவும் அவ்விடங்களிலிருந்து வெட்டி அகற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது" என்றார்.

# இ/அல்-மினாரா பாடசாலையில் டிசெ. 19, 20 இல் கண்காட்சி

*பலாங்கொடை தினகரன் நிருபர்*

பலாங்கொடை இ/அல்மினாரா வித்தியாலயத்தில் எதிர்வரும் 19ஆம் 20ஆம் திகதிகளில் மாபெரும் கண்காட்சி நடைபெறவுள்ளதாக, அவ்வித்தியாலய அதிபர் எம்.இஸட்.எம்.முக்தார் தெரிவித்தார்.

இந்தக் கண்காட்சியில் பிரதம அதிதியாக பலாங்கொடை கல்வி வலயப் பணிப்பாளர் பி.பி.சி.விஜயவர்ணசூரிய கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். விசேட அதிதியாக கல்வி வலய பிரதிப் பணிப்பாளர் பி.எல்.எஸ்.சமந்த, வலயக் கல்விப் பணிப்பாளர் யூ.எம்.நதிகா செனவிரத்ன, பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆர்.விநோத் கண்ணன், பலாங்கொடை பள்ளிவாசல்கள் பரிபாலன சபைத் தலைவர் அல்ஹாஜ் ஏ.எல். நஜிபுத்தீன் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

Insync Expo2023 எனும் இந்தக் கண்காட்சி இரு தினங்கள் வித்தியாலய வளாகத்தில் நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# சப்ரகமுவ மாகாண சாகித்திய விழா; மாகாண சபையில் ஓவியக் கண்காட்சி

*காவத்தை தினகரன் விசேட நிருபர்*





சப்ரகமுவ மாகாண சாகித்திய விழாவை முன்னிட்டு ஓவியம் மற்றும் புத்தகக் கண்காட்சி சப்ரகமுவ மாகாண சபையில் நேற்று புதன்கிழமை (13) ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கண்காட்சி நேற்றைய தினம் முதல் நாளை வெள்ளிக்கிழமை (15) வரை மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

சப்ரகமுவ மாகாண சாகித்திய விழா எதிர்வரும் 15ஆம் திகதி சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்கவின் தலைமையில் சப்ரகமுவ மாகாண சபைக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கண்காட்சி நிகழ்வில் சப்ரகமுவ மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் பிரபாத் உதாகர, சப்ரகமுவ மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சாமர பமுனு ஆராச்சி, பாடசாலை மணவர்கள், அதிபர்கள் ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

லுணுகலையில்

# வசதி குறைந்த மூன்று குடும்பங்களுக்கு வீடுகள்

*தலவாக்கலை குறூப் நிருபர்*



பதுளை மாவட்டத்தின் லுணுகலை, ஹொப்டன் ஆகிய தோட்டப் பகுதிகளில் வாழ்கின்ற வசதி குறைந்த மற்றும் விசேட தேவையுடைய மூன்று குடும்பங்களுக்காக சகல வசதிகளையும் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் பயனாளிகளிடம் கடந்த ஞாயிற்றுக்கிழமை (10) கையளித்து வைக்கப்பட்டன.

இலங்கையில் பிறந்து தற்போது கனடாவில் வசித்து வரும் மணி பிரதீப் ராஜின் முழுமையான நிதி அனுசரணையில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன. இதன்போது, இம்முறை தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் லுணுகலை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், லுணுகலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, லுணுகலை பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர், கிராம உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ஆமினா தேசிய பாடசாலையில் மாணவர் பாராளுமன்ற அங்குரார்ப்பண நிகழ்வு

*மாத்தளை சுழற்சி நிருபர்*

மாத்தளை ஆமினா தேசிய பாடசாலையில் மாணவர் பாராளுமன்ற அங்குரார்ப்பண நிகழ்வு இன்று (14) வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு அப்பாடசாலையில் நடைபெறும். பாடசாலை அதிபர் ஜே.எஸ்.எம். பவாயிதா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ.அரவிந்தகுமார் பிரதம அதிதியாக கலந்துகொள்கிறார். விசேட அதிதிகளாக மத்திய மாகாண கல்வித் திணைக்களப் பணிப்பாளர் எம்.ஜி.அமரசிரி பிரியதாச, மாத்தளை வலயக் கல்விப் பணிப்பாளர் ஹெட்டியாராச்சி ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

# பாடசாலை மாணவர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கல்

*நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்*

இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயத்தினுடைய நூற்றாண்டு விழாவின் ஓரங்கமாக கண்டி, ரங்கலை குமரன் தமிழ் வித்தியாலயம் மற்றும் மலைமகள் தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. இப்பாடசாலை மாணவர்களுக்கு புத்தகங்கள் உட்பட கற்றல் உபகரணங்கள், குடைகள், இந்திய இனிப்புப்பண்டங்கள் ஆகியவை வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் இந்திய உதவி உயர்ஸ்தானிகர் ஆதிரா மற்றும் கண்டி மாவட்ட மேலதிக செயலாளர் நிலுகா புலத்கே ஆகியோர் கலந்துகொண்டு இந்த அன்பளிப்புகளை மாணவர்களுக்கு வழங்கினர்.

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை
கைத்தொழில் அமைச்சு

**சுரங்கக் குழி உபகரணங்கள் மற்றும் சிதைந்த பொருட்களின் ஏலவிற்பனை**

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையினால் கைது செய்யப்பட்டு அரசுரிமையாக்கப்பட்டுள்ள சுரங்கக் குழி உபகரணங்கள் (அனுமதியற்ற இரத்தினக்கல் அகழ்வின்போது) மற்றும் பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ள பின்வரும் அலுவலக பொருட்களை 2023-12-21 மற்றும் 2023-12-22 ஆகிய திகதிகளில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையில் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையின் இரத்தினபுரி பிராந்திய அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

- சுரங்கக் குழி வேலையின்போது பயன்படுத்தப்படும் சுரங்கக்குழி உபகரணங்கள்
- பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட அலுவலகத் தளபாடங்கள் (மேசை, கதிரை)
- பல்வேறு அளவுகளிலான டயர்கள்
- கணனி சார்ந்த உபகரணங்கள்
- கட்டிடப் பராமரிப்பு மற்றும் திருத்தவேலைகளின்போது அப்புறப்படுத்தப்பட்ட சிதைந்த பொருட்கள்

**நிபந்தனைகள் :**

- 2023-12-14ஆம் திகதி முதல் 2023-12-30ஆம் திகதி வரையில் வேலை நேரங்களில் மட்டும் தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையின் இரத்தினபுரி பிராந்திய அலுவலகத்தில் இந்த உபகரணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
- ஏலவிற்பனையில் பங்குபற்றும் ஒருவர் ரூபா 500.00 + VAT செலுத்துதல் வேண்டும்.

**விசாரணைகள் :**

| | | |
|---|---|---|
| பிரதிப் பணிப்பாளர் | - செ.ம.பிர.அபி - | 071-536 2 547 |
| உதவிப் பணிப்பாளர் | - செ.ம.பிர.அபி - | 071-536 2 511 |
| | - | 045-222 2 159 |

**தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி**
**தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை,**
**இல. 12, ''மெக்சன்ஸ் டவர்'', அல்பிரட் ஹவுஸ் கார்டன், கொழும்பு 03.**
**தொலைபேசி 045-2222159 தொலைநகல் 045-2223139**
**இணையதளம் www.ngja.gov.lk**


# ஐ.நா.சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு விஜயம்

*கல்லடி குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்*



ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி மார்க் அன்ரே பிரன்சி (Marc Andre Franche) மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு அண்மையில் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக பல்வேறுபட்ட விடயங்கள் விளக்கமளிக்கப்பட்டதுடன், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வளங்கள் தொடர்பாகவும் இதன்போது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சனி ஸ்ரீகாந்தினால் விளக்கமளிக்கப்பட்டது.

இதன்போது மீன்பிடி, விவசாயம், கால்நடை வளர்ப்பு, இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள், சுற்றுலாத்துறை, மட்டக்களப்பு வாவியை ஆழப்படுத்தி வெள்ளத்தடுப்பை மேற்கொள்வது உள்ளிட்ட பல்வேறு துறைசார் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி உள்ளிட்ட குழுவினருக்கு விளக்கமளிக்கப்பட்டன.

வடக்கு மற்றும் கிழக்கிற்கு சில பொருளாதார உதவிகளை வழங்கவுள்ளதாகவும், அதற்கமைய மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் தம்மால் உதவ முடியுமெனவும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி இதன்போது தெரிவித்தார்.

இதன்போது மாவட்டத்தின் தேவைப்பாடுகள் அடங்கிய திட்ட அறிக்கையொன்று மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரினால் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதியிடம் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விசேட கலந்துரையாடலில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கையின் வடகிழக்கு சமாதான ஐக்கியத்துக்கான இணைப்பாளர் தாறக்க எட்டியாராச்சி, மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் பிரதி திட்டமிடல் பணிப்பாளர்களான ஆர்.ஜதீஸ்குமார், வீ.நவநீதன் உள்ளிட்ட மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டுள்ளனர்.


சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

119

பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

NW-LJ-2943 LANKA ASHOK LEYLAND, COMET TIPPER 1613, MOTOR LORRY 2011, YELLOW கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 081 2 081033. 082260

வேலைவாய்ப்பு

325

தொழில்துறை பொது

சாதாரண பராமரிப்பு நிலையத்திற்கு நோயாளர்களைப் பராமரிப்பதற்கு பயிற்சி பெற்ற/ பெறாத ஆண்/ பெண் ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். தினச் சம்பளம் ரூ. 2000/ = தேவைப்படும் ஆவணங்கள் கிராம அதிகாரி சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டையுடன் இன்றே அழையுங்கள். 0752306797, 011 7 604526, 0766542999. 082353


# உலகத் தமிழர் பேரவையினர் மட்டக்களப்பு விஜயம்

*மட்டக்களப்பு விசேட நிருபர்*



புலம்பெயர் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உலகத் தமிழர் பேரவையினர் நேற்று (13) மட்டக்களப்பிற்கு விஜயம் செய்தனர்.

உலகத் தமிழர் பேரவையின் பணிப்பாளர் கலாநிதி இலியஸ் ஜெயராஜா, திருமதி சாந்தினி ஜெயராஜா மற்றும் ராஜ் தவரட்ணசிங்கம் ஆகியோர் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அருட்கலாநிதி ஜோசப் பொன்னையாவை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

பின்னர் இனங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் ஆறு அறிக்கைகள் கொண்ட இமாலயப் பிரகடன அறிக்கை தொடர்பில் விளக்கமளித்தனர்.

இந்நிகழ்வில் எகட் கரித்தாஸ் நிறுவன பணிப்பாளர் அருட்தந்தை ஏ.யேசுதாசன், மட்டக்களப்பு சிவில் சமூகத்தின் தலைவர் எஸ். மாமாங்கராஜா உள்ளிட்ட உறுப்பினர்கள், காந்தி சேவா சங்கத் தலைவர் ஏ.செல்வேந்திரன், மட்டக்களப்பு முன்னாள் அரசாங்க அதிபர் மா.உதயகுமார் மற்றும் மட்டக்களப்பு மாநகரசபையின் முன்னாள் முதல்வர் தி.சரவணபவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# காத்தான்குடியில் மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு விசேட நிகழ்வுகள்

*புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்*



காத்தான்குடியில் மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு மாற்றுத் திறனாளிகளுக்கான நிகழ்வொன்று நேற்று காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நடைபெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலகமும் காத்தான்குடி நகர சபை ஆகியவற்றின் அனுசரணையுடன் காத்தான்குடி பிரதேச மட்ட மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

காத்தான்குடி பிரதேச மட்ட மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் தலைவி ஏ.ஆர். நஸ்லியா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் காத்தான்குடி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி. எம்.எஸ்.சில்மியா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.முகம்மட் அலியார் காத்தான்குடி பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் பி.ராஜ்மோகன் உட்பட அதிகாரிகள் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதில் மாற்றுத் திறனாளிகளின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# சீனன்கோட்டை ஆரம்ப பிரிவு பாடசாலைக்கு பாதணிகள் அன்பளிப்பு



பேருவளை சீனன்கோட்டை 'முத்துக்கள் வட்ஸப்' குழும ஏற்பாட்டில் இரண்டாம் கட்டமாக சீனன்கோட்டை ஆரம்ப பிரிவு பாடசாலையில் தெரிவு செய்யப்பட்ட மாணவிகளுக்கு இலவசமாக பாடசாலை பாதணிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலை அதிபர் காரியாலயத்தில் இடம்பெற்றது.

குழுமத்தின் தலைவர் ராமிஸ் நாஸிம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாணவிகளுக்கான பாதணிகளை ஆரம்ப பிரிவு பாடசாலை அதிபர் பாத்திமா ஜெஸீலாவிடம் அங்கத்தவர்களான முன்னாள் நகர சபை உறுப்பினர் சியாம் முனவ்வர் மற்றும் ஸலீம் ஹாஜியார் ஆகியோர் இணைந்து கையளிப்பதையும் உப அதிபர் உட்பட குழும அங்கத்தவர்கள் அருகிலிருப்பதையும் படத்தில் காணலாம்.


**பதவி வெற்றிடம்**

**நிதி முகாமையாளர்**

IWWRMP

**ஒருங்கிணைந்த நீரேந்துப் பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ திட்டம் (IWWRMP)**

**நீர்ப்பாசன அமைச்சு**

ஒருங்கிணைந்த நீரேந்துப் பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ திட்டமானது உலக வங்கியினால் நிதியுதவி வழங்கப்பட்ட (IWWRMP) 2025 ஒக்டோபரில் பூர்த்தி செய்யப்பட எதிர்பார்க்கப்பட்டுள்ள நீர்ப்பாசன அமைச்சின் கீழுள்ள திட்டமாகும்.

01/ 2019 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள, திணைக்கள சுற்றறிக்கை மற்றும் அரசாங்க ஆட்சேர்ப்பு நடைமுறை ஆகியவற்றின் பிரகாரம் முழு நேர "ஒப்பந்த அடிப்படையில்" கொழும்பு திட்ட முகாமைத்துவ அலகில் நிதி முகாமையாளர் பதவிக்காக (PS3) மட்டத்தில் பணியாற்றுவதற்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தேவைப்படும் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

**கீழேயுள்ள I அல்லது II அல்லது III**

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உரித்தான துறையில் சித்திகரமாக பூர்த்தி செய்யப்பட்ட இளநிலை பட்டம் அல்லது உரித்தான துறையில் பட்டப்படிப்பிற்கு நிகரான தகைமையென UGC இனால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது உரித்தான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட இணைந்த அங்கத்துவம்/ நிகரானதொரு தொழில்சார் தகைமை அத்துடன் முகாமைத்துவ பதவியில் ஆகக் குறைந்தது 8 வருட பட்டப்படிப்பின் பின்னரான தகைமைப்பட்ட அனுபவம்.

II. சித்திகரமாக பூர்த்தி செய்யப்பட்ட இளநிலை பட்டம் அல்லது உரித்தான துறையில் பட்டப்படிப்பிற்கு நிகரான தகைமையென பமாஆ இனால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது உரித்தான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட இணைந்த அங்கத்துவம்/ நிகரானதொரு தொழில்சார் தகைமை அத்துடன் உரித்தான துறையில் பட்டப்பின் பட்டம் அல்லது Corporate/Chartered Membership அல்லது உரித்தான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட நிகரான தொழில்சார் தகைமை அத்துடன் முகாமைத்துவ பதவியில் ஆகக் குறைந்தது 8 வருட பட்டப்படிப்பின் பின்னரான தகைமைப்பட்ட அனுபவம்.

III. நாடளாவியரீதியிலான அரசாங்க சேவையில் 1 ஆம் வகுப்பு அலுவலர் அல்லது உரித்தான துறையில் நிகரான நிலபரத்தில் அத்துடன் 1 ஆம் வகுப்பு பதவியில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவம்.

சம்பள மட்டம் பிஎஸ் 03 வகுதி: 140,000.00 – 155,000 ரூபா (01/2019 என்ற இலக்கமுடைய முசேதி சுற்றறிக்கையின் பிரகாரம்)

**பொதுவான நிபந்தனைகள்:**

1. விண்ணப்பதாரிகள் ஆகக் குறைந்தது 21 வயதாகவும் 62 வயதிற்கு மேற்பட்டவராகவுமிருத்தல் கூடாது.
2. சம்பள மட்டம்: 2019.03.15 ஆம் திகதியிடப்பட்டதும் 01/2019 என்ற இலக்கமுமுடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரமான அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பள மட்டங்கள் மற்றும் படிகளுடன் அதன் பின்னரான மாற்றங்கள்.
3. வேலைவாய்ப்பு ஒப்பந்தமானது ஒரு வருடத்திற்கு அமைவதுடன் செயற்பாடு மற்றும் திட்டத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் வருடந்தோறும் புதுப்பிக்கக்கூடியது.
4. அவர் (ஆண்/பெண்) உரித்தான அரசாங்க நிறுவனங்கள் மற்றும் ஏனைய முகவராண்மைகளுடன் தொடர்பு மற்றும் ஒருங்கிணைத்தல்களுடன் கடமைகளை செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றார்.
5. இலங்கையில் உலக வங்கி/ வெளிநாட்டு நிதியமிடப்பட்டசெயற்றிட்டங்களின் வேலையில் முன் அனுபவம் அவசியமானதாகும்.
6. இப்பதவிக்காக ஆங்கிலத்தில் புலமை, அரசாங்க ஒழுங்குவிதிகளில் பரிச்சயம் மற்றும் கணனி அறிவு ஆகியன அவசியமான முன்தகைமைகளாகும்.
7. நீண்ட நேரங்கள் மற்றும் வார இறுதிகளில் வேலை செய்யும் ஆற்றல்.
8. இளம் சுறுசுறுப்புள்ள மற்றும் ஆர்வமுள்ள அபேட்சகர்கள் விண்ணப்பிப்பதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

சுயதரவு மற்றும் இரு பரிந்துரையாளர்களின் தொடர்பு இலக்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் 2023 டிசம்பர் 27 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியை வந்தடையும் வகையில் அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியையும் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிகமாக, விண்ணப்பதாரிகள் அதே விண்ணப்பத்தை iwwrmp@sltnet.lk என்ற மின்னஞ்சலிற்கு விண்ணப்பிக்கும் பதவியை உப தலைப்பாகக் குறிப்பிட்டு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**ஒருங்கிணைந்த நீரேந்துப் பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ திட்டம் (IWWRMP)**
**2 ஆம் மாடி, மஹாவலி நிலையம்,**
**இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,**
**கொழும்பு-07.**
**இணையம்: www.Iwwrmp.lk**



**வெற்றிடங்கள்**

**நீர்ப்பாசன அமைச்சுக்கு**
**திட்ட பணியாளர்களின் ஆட்சேர்ப்பு**

உலக வங்கியினால் நிதியளிக்கப்பட்ட காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சி நிரல் அணுகுமுறை (CResMPA) திட்டத்திற்காக அரச ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை திணைக்கள (MSD) சுற்றுநிருபத்தின்படி பின்வரும் பதவிகளுக்காக "ஒப்பந்த அடிப்படை" ஒன்றில் திட்ட ஒருங்கிணைப்பு பிரிவுக்காக (PCU) திட்டப் பணியாளர் ஆட்சேர்ப்புக்கு விடாமுயற்சி மற்றும் அர்ப்பணிப்புள்ள தகுதிபெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவிகளின் சம்பள அளவு மேலுள்ள 01/2019 ஆம் இலக்க MSD சுற்றுநிருபத்தில் கூறப்பட்டிருப்பதோடு அட்டவணை 3இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

- விண்ணப்பதாரர்கள் 64 வயதுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.
- அரச ஒழுங்குமுறைகளில் பரீட்சயத்துடன் ஆங்கில மொழியில் தேர்ச்சி இருத்தல் வேண்டும் என்பதோடு கணினி அறிவு கட்டாய முன் நிபந்தனையாகும்.
- இலங்கையில் வெளிநாட்டு நிதியிலான வேலைகளில் அனுபவம் மற்றும் தொடர்புடைய துறையில் வேலை அனுபவம் கூடுதல் அனுகூலமாகும்.

| இல. | PS பிரிவு | பதவி | பதவி எண்ணிக்கை | ஆட்சேர்ப்பு அடிப்படை | பொருந்தும் சுற்றுநிருபம் |
|---|---|---|---|---|---|
| 01 | PS 3 | சிரேஷ்ட வேலைத் திட்டமிடல் நிபுணர் (கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் கற்றல்) | 01 | ஒப்பந்தம் | 01/2019 ஆம் இலக்க MSD சுற்றுநிருபம் |
| 02 | PS 4 | திட்ட பொறியியலாளர் (ஒப்பந்த முகாமைத்துவம்) | 01 | ஒப்பந்தம் | |
| 03 | PS 5 | தொடர்பாடல் அதிகாரி | 01 | ஒப்பந்தம் | |
| 04 | PS 5 | பெறுகை அதிகாரி | 01 | ஒப்பந்தம் | |
| 05 | PS 6 | திட்ட செயலாளர் | 01 | ஒப்பந்தம் | |

மேலதிக தகவல்களுக்கு, www.irrigationmin.gov.lk என்ற இணையதளத்திற்கு பிரவேசிக்கவும். மேல் குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபத்தை பார்ப்பதற்கு நிதி அமைச்சு இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.

விண்ணப்பங்களை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு, கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு கிடைப்பதற்கு 2023 டிசம்பர் 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பவும்.

**திட்டப் பணிப்பாளர்**
**காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சி நிரல் அணுகுமுறை (CResMPA)**
**இல. 11, ஜாவத்த வீதி, கொழும்பு 05,**

03. விலைமனுக்களுடனான கேள்விப் பத்திரங்கள் 2023.12.27 மு.ப. 10.30 இற்கு மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளர் பணிமனையில் திறக்கப்படும். மேலதிக விபரங்களை மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் கணக்காளரிடம் பெற்றுக்கொள்ளலாம். பிரதேச பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தொ.பே. இலக்கம் 0112850252 / 0112850253**
**பெக்ஸ் - 0112839589**
**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**அபேக்ஷா வைத்தியசாலை,**
**மஹரகம.**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
BANK OF CEYLON BOC Lake House Branch
Acc. No. 000000377

## களனி பல்கலைக்கழகம்

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

| | |
|---|---|
| திகதி | : 2023 டிசம்பர் 14 |
| கடன் மற்றும் தலைப்பு | : Loan 3698/3699 – விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வளங்கள் அபிவிருத்தி செயற்றிட்டம். |
| ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு | : MOE/STHRD/KE/E77: களனி பல்கலைக்கழக – 2 ஆம் பொதி – கணனி மற்றும் தொழில்நுட்பவியல் பீடத்தில் பொறியியல் வேலைப்பொகுதிக்கு உபகரணங்களின் பெறுகை. |
| விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதி | : 2024 ஜனவரி 18 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு. |

1. கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டத்தின் (STHRD Project) ஆகு செலவிற்காக 145 மில்லியன் அ.ஐ.டொலருக்கு நிகரான தொகையை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) இலங்கை சனநாயக சோசலிச குடியரசு பெற்றுள்ளதுடன், இந்த நிதியிடல் பெறுகைகளின் பாகமொன்றை மேலே பெயர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழான பணக்கொடுப்பனவுகளுக்கு செலவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் தகுதியுள்ள வள நாடுகளின் விலைமனுதாரர் இதில் பங்குபற்றலாம்.
2. MOE/STHRD/KE-E77: Procurement of Equipment for Engineering Workshop at the Faculty of Computing and Technology, University of Kelaniya-Package 2 என்பதற்காக களனி பல்கலைக்கழக (''கொள்வனவுக்காரர்'') விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் சார்பாக களனி பல்கலைக்கழக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். இந்த பெறுகையானது களனி பல்கலைக்கழக கணனியாக்கல் மற்றும் தொழில்நுட்பவியல் பீடத்தின் உத்தேசிக்கப்பட்டுள்ள ஆய்வுகூட கட்டிடத்திற்கு கணனிகளை வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல் ஆகியவற்றை அடக்குகின்றது.
3. பகிரங்க போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் ஆஅவ இன் பொருட்களின் பெறுகை தனிக்கட்ட-ஒரு உறை என்பதற்கு இசைவாக நடத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விளக்கியவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதரர்களும் இதில் பங்குபற்றலாம்.
4. விலைமனுக்கோரல் ஆவணத்தில் நிர்ணயிக்கப்பட்டவாறு பின்வரும் முக்கிய தகைமைகளையுடைய தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மாத்திரமே இந்த விலைமனுக்கோரலில் பங்குபற்றலாம்.

| அம்ச இல. | விளக்கம் | அலகுகளின் எண்ணிக்கை | 6 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறு வழங்கலின் நோக்கத்திற்கான தன்மை மற்றும் சிக்கல்தன்மையில் பின்வரும் ஆகக் குறைந்த பெறுமதியில் ஆகக் குறைந்தது 2 ஒப்பந்தங்களை கடந்த 5 வருடங்களில் பிரதான வழங்குநராக சித்திகரமாக பூர்த்தி செய்திருத்தல் (இ.ரூபாவில்) | கடந்த மூன்று வருடங்களில் பூர்த்தி செய்யப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கீடு செய்யப்பட்ட பின்வருவனவற்றின் வருடாந்த நிதிப்புரள்வின் ஆகக்குறைந்த சராசரி தொகை (இ.ரூபாவில்) | விலைமனுப் பிணைத் தொகை (இ. ரூபாவில்) |
|---|---|---|---|---|---|
| 01 | Laboratory Melting Furnace | 01 No. | 4.8 மில்லியன் | 12 மில்லியன் | 70,000.00 |
| 02 | Universal wood working Machine | 01 No. | 5.6 மில்லியன் | 14 மில்லியன் | 80,000.00 |
| 03 | Laser cutting/ engraving Machine | 01 No. | 4 மில்லியன் | 10 மில்லியன் | 60,000.00 |

5. மேலதிக தகவலைப் பெறுவதற்காகவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிப்பதற்காகவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

**செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளர்,**
**செயற்றிட்ட அமுல்நடாத்தல் அலகு,**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்**
**கணனியாக்கல் மற்றும் தொழில்நுட்பவியல் பீடம்**
**களனிப் பல்கலைக்கழகம்,**
**பல்கலைக்கழக பாதை, புலுகஹா சந்தி,**
**கண்டி வீதி, களனி, இலங்கை.**

**தொலைபேசி: +94(0)11 2984879**
**தொலைநகல்: +94 11 2984879**
**மின்னஞ்சல்: dpd-sthrd@kin.ac.lk**

6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல ஆவணங்களை கொள்வனவு செய்ய விரும்பும் தகுதியுள்ள விலைமனுதாரர் ரொக்கப் பணத்தில் 5,000.00 இலங்கை ரூபாவை செலுத்திய பின்னர், MOE/STHRD/KE-E77: Procurement of Equipment for Engineering Workshop at the Faculty of Computing and Technology, University of Kelaniya-Package 2 என்பதற்கான விலைமனுக்கோரல் ஆவணத்தை கோரி மேலேயுள்ள முகவரிக்கு கடிதமொன்றை அனுப்புதல் வேண்டும். ஆவணங்கள் 2024 ஜனவரி 17 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் வழங்கப்படும். இழப்பு அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கான பொறுப்பு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
7. விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப் பிணையொன்றுடன் 2024 ஜனவரி 18 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரியில் உங்கள் விலைமனுவை ஒப்படைக்கவும்.

**செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளர்,**
**செயற்றிட்ட அமுலாக்கல் அலகு,**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
**11 ஆம் மாடி (அறை இல. எல்11-5)**
**கணனியாக்கல் மற்றும் தொழில்நுட்பவியல் பீடம்,**
**களனிப் பல்கலைக்கழகம்,**
**பல்கலைக்கழக பாதை, புலுகஹா சந்தி,**
**கண்டி வீதி, களனி.**

8. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியாக சேர்க்கப்பட்டு முத்திரையிடப்பட்டு முறையே ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என அடையாளமிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இவ்விரு தபாலுறைகளும் தனியொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் "MOE/ STHRD/KE-E77: Procurement of Equipment for Engineering Workshop at the Faculty of Computing and Technology, University of Kelaniya-Package 2" என அடையாளமிடப்படல் வேண்டும்.
9. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி நேரத்தின் பின்னர், விலைமனுக்கள் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**களனி பல்கலைக்கழகம், தளுகம,**
**களனி, இலங்கை.**
**திகதி: 2023 டிசம்பர் 14.**

# பெறுகை அறிவித்தல்

## வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

**(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில், மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)**

## செல்ஃப் லோடர் டிரக் ஒன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்

**(Self Loader Truck with Winch)**

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குத் தேவையான செல்.்.ப் லோடர் டிரக் ஒன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| கேள்வி இலக்கம் | விபரங்கள் | கேள்விப் படிவக் கட்டணம் (அதிகார சபையில் பதிவு செய்துள்ளவர்கள் தவிர) | கேள்விப் பிணை முறியின் பெறுமதி ரொக்கப் பணத்தில் | கேள்விகள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| PRDA/WP/ PRO/2022/111 | செல்.்.ப் லோடர் டிரக் ஒன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் | ரூபா 1000.00 + Vat | ரூபா 10,000.00 | 2024-01-02 பி.ப. 2.30 மணிக்கு |

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியை 2023-12-14ஆம் திகதி முதல் 2024-01-01ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் மேற்கூறப்பட்ட கேள்விப் படிவக் கட்டணத்தைச் செலுத்தி இவ்வதிகார சபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை ரொக்கப் பணமாக அல்லது வங்கிப் பிணைமுறி மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்குறிப்பிடப்பட்ட பெறுமதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறக்கப்படுதல் 2024-01-02ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு இந்த அலுவலகத்தில் இடம்பெறும் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011-4849825/45**

## இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

## முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு

## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**பேகாஸ் கன்வேயர் சங்கிலி இணைப்புகள் (Bagasse Conveyor Chain Links) வழங்குவதற்காக தேசிய போட்டி முறையிலான விலைமனுக்கோரல் (PR-7636)**

செவனகல சீனித் தொழிற்சாலைக்கு பேகாஸ் கன்வேயர் சங்கிலி இணைப்புகள் (Bagasse Conveyor Chain Links) வழங்குவதற்கு ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்களிடமிருந்து வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக்குழு (DPC) தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. மீளளிக்கப்படாத கட்டணமாக **LKR 8,000.00** பணமாக செலுத்தி 2024 ஜனவரி 03 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணிவரை வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல-27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பமொன்றினை சமர்ப்பித்து விலைமனு ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்றை விலைமனுததரினால் கொள்வனவு செய்ய முடியும்.
2. விலைமனுவுடன் மீளளிக்கப்படாத கட்டண வைப்பு பற்றுச்சீட்டு அல்லது வங்கி வரைவை சமர்ப்பித்தல் வேண்டும். இணைக்கப்படாத அத்தகைய விலைமனு நிராகரிக்கப்படும்.
3. விலைமனுக்களை 2024 ஜனவரி 04 ஆம் திகதி 14.00 மணிக்கு தாமதிக்காது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல.27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்ப 04 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் பதிவுத் தபால், விரைதூதர், நேரடியாக கையளிக்கப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"பேகாஸ் கன்வேயர் சங்கிலி இணைப்புகள் (Bagasse Conveyor Chain Links) வழங்குவதற்கான கேள்விமனுக்கோரல்"** எனத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதமாக கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
4. அனைத்து மனுக்களுக்கும் **"மனுப்பாதுகாப்பு" ரூ.450,000.00 (நான்கு இலட்சத்து ஐம்பது ரூபாய்)** இணைத்திருத்தல் வேண்டும் மேலும் விலைமனுக்கள் திறக்கப்பட்ட திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வறையக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - தலைமை அதிகாரி (கொள்முதல்) இருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி : **+94 11 2 584 184 , +94 77 010 3359,** தொலைநகல் : **+ 94 11 2500674, (மின்னஞ்சல்: sapumal@lscl.lk).**

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,
இல-27, மெல்போர்ன் ஒழுங்கை,
கொழும்பு 04.

SELACINE



SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

# பெறுகை அறிவித்தல்

## பேராதனை சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலையில் உணவகத்தை நடத்திச் செல்லல் – 2024

2024ம் ஆண்டிற்கு கீழ்க்காணும் உணவகத்தை நடத்திச் செல்லும் ஒப்பந்தத்திற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | உணவகம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் ரூ. | மீளளிக்கப்படும் கேள்விப் பிணையின் பெறுமதி ரூ. |
|---|---|---|---|
| 1 | வைத்தியசாலை பொது உணவகம் | 5000.00 | 180,000.00 |
| 2 | மருத்துவ விடுதி உணவகம் | 2000.00 | 8000.00 |
| 3 | தாதி, மருத்துவம் சாராத மற்றும் இடை மருத்துவ அதிகாரிகளுக்கான பொது விடுதி உணவகம் | 3000.00 | 3500.00 |

மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணத்தை காசாகச் செலுத்தி மற்றும் எழுத்துமூல விண்ணப்பத்துடன் தமது ஆளடயாளத்தை உறுதி செய்வதற்காக தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்து 2023.12.13 முதல் 2023.12.26 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணத் தொகுதியை பேராதனை, சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலையின் ஐந்தாம் மாடியில் அமைந்துள்ள அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்பட்டுள்ள நபர்களுக்கு கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

முறையாகப் பூர்த்தி செய்த கேள்வி ஆவணங்கள் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென இரு பிரதிகளாக வேறு வேறாக பொறியிடப்பட்ட இரு உறைகளில் இட்டு அவ் உறைகளை மீண்டும் ஒரு பொறியிடப்பட்ட உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் '2024 பேராதனை சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலை உணவகத்தை நடத்திச் செல்வதற்கான விலைமனுக்கள்' என்று குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் கொண்டு வந்து உள்ளிட்டு 2023.12.27 பி.ப. 2.00 இற்கு முன்பு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலை,**
**பேராதனை.**
2023.12.13
**081-2389110 நீடிப்பு 2621**

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/05/PT/6507 | Engine Spares for Terberg Terminal Tractors | 50,000.00 | 1000.00 | 2024.01.30 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/PT/6487(EL) | Spare Gantry Motor for Mitsui Transfer Cranes | 250,000.00 | 3,500.00 | 2024.01.30 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/PT/6550(EL) | 250 Nos. Reefer Socket Interior Assembly for Reefer Sockets of ECT | 90,000.00 | 1,000.00 | 2024.01.30 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/PT/6555(EL) | 05 Nos. Stop Solenoid Valve Repair Kit for Wartsila SL26 Engines | 15,000.00 | 1,000.00 | 2024.02.01 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/PT/6557(MP) | 3008KG of Wire Rope Lubricant for Container Cranes in JCT & ECT | 110,000.00 | 3,500.00 | 2024.02.01 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/23/PT/09/135 (KC) | 84000 (KGS) of Coconut Oil | 750,000.00 | 12,500.00 | 2024.01.04 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/02/062 | 15 Nos. MS Plates 2400 X 1200 X 25MM | 29,000.00 | 1,000.00 | 2024.01.04 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/03/034 | 15 Nos. Motor Tyres 1800 X 25 40 PLY Tubeless | 135,000.00 | 3,500.00 | 2024.01.04 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/10/063 | 06 Nos. of Bearing 60 240 MM | 22,500.00 | 1,000.00 | 2024.01.05 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/16/065 | 08 Nos. Air Compressors for UD Nissan Prime Movers | 20,000.00 | 1,000.00 | 2024.01.05 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/02/061 | Spares for HYVA Garbage Compactor | 20,000.00 | 1,000.00 | 2024.01.05 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/04/070 | Mild Steel Plates LR 'A' 6000 X 1500 X 6MM – 10 Nos. | 70,000.00 | 1,000.00 | 2024.01.08 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/02/059 | 900 Nos. Motor Tyres 1100 X 20 16 PLY | 875,000.00 | 12,500.00 | 2024.01.08 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/16/066 | 12 Nos. of Cutlass Bearings for the Propeller Shafts of the Launches Pilot 11, 12 and 13 | 24,000.00 | 1,000.00 | 2024.01.08 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/05/066 | Hydraulic Pump Units for the Aquamaster US 3001 CP Propulsion Units of Tug Gotainbara & Nandimithra | 17,000.00 | 1,000.00 | 2024.01.09 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/01/068 | Spares for Terberg Terminal Tractors | 23,000.00 | 1,000.00 | 2024.01.09 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/17/067 | Mild Steel Plates LR Grade "A" | 150,000.00 | 3,500.00 | 2024.01.09 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/02/063 | Spares for Mercedes Benz Engine | 20,000.00 | 1,000.00 | 2024.01.10 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/15/051 | MS Angle | 17,000.00 | 1,000.00 | 2024.01.10 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/03/062 | 5000PKT-Photocopy Paper A4 Size 80 GSM (500 Sheets/Packet) | 53,000.00 | 1,000.00 | 2024.01.10 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/07/060 | Spares for UD Nissan Prime Movers | 23,000.00 | 1,000.00 | 2024.01.11 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும்,எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் (பிசிஏ 03 படிவத்தையும்) சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவத்திற்கான பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2023 டிசம்பர் 15 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக் கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலேகுறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப் பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

50th 1971 - 2021

# போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு

# அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம்

## 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2024ஆம் வருடத்தில் பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளைப் பெற்றுக்கொள்வதற்காக பொருத்தமான நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்களிடமிருந்து இரத்மலானை, இல. 07, பொருபன வீதி, அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்தினால் (SD&CC) விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

01. பின்வரும் மாதிரியின் பிரகாரம் விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். எம்மால் விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்பட மாட்டாது.
02. பொருட்கள் அல்லது சேவையை குறிப்பிட்டதொரு பிரதேசம் அல்லது மாவட்டத்திற்கு வழங்க விரும்பினால், தயவுசெய்து உங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்ட பிரதேசம் அல்லது மாவட்டத்தை தெளிவாக சுட்டிக் காட்டவும்.
03. அனைத்து விண்ணப்பங்களையும் தாங்கிவரும் கடித உறைகளின் இடது பக்க மேல் மூலையில் ''2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்'' என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் வழங்கல்கள் முகாமையாளர், அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனம், இல. 07, பொருபன வீதி, இரத்மலானை என முகவரியிடப்படல் வேண்டும்.
04. பொருட்களின் வழங்கல்/ சேவைகளை வழங்கல் ஆகியனவற்றிற்கான விலைமனுக்கோரல்கள் சாதாரணமாக பதிவு பெற்ற வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும். எவ்வாறாயினும், இலங்கை அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனமானது வேறேதாவது வளங்களிலிருந்தும் விலைமனுக்கோரல்களை அழைத்து தேவைப்பாடுகளை கொள்வனவு செய்வதற்கான உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.
05. எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் எந்தவொரு விண்ணப்பத்தையும் பதிவு செய்வதற்காக ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை கூட்டுத்தாபனம் தன்னகத்தே கொண்டுள்ளது.
06. ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவைக்கான மீளளிக்கப்படாத பதிவு செய்தல் கட்டணமாக 1000.00 ரூபா + SSCL + VAT என்பவற்றை ரொக்கப் பணத்தில் இரத்மலானை, பொருபன வீதி, 7 ஆம் இலக்கத்திலுள்ள தலைமை அலுவலகத்திற்குச் செலுத்தப்படல் வேண்டும் அல்லது "STATE DEVELOPMENT & CONSTRUCTION CORPORATION" என்ற பெயரில் வழங்கப்பட்ட காசுக்கட்டளை/ காசோலை/ செலுத்தும் கட்டளை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். காசுக் கட்டளையானது மொறட்டுவ அஞ்சல் அலுவலகத்தில் மாற்றக் கூடியதாக அமைந்திருத்தல் வேண்டும்.
07. விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் 2024.01.05ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது வழங்கல்கள் முகாமையாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
08. விபரக்குறிப்புக்கள், மாதிரிகள் அல்லது இலங்கை அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபன கொள்வனவு கட்டளையில் விபரிக்கப்பட்டவாறு ஒத்திசைவான வகையில் தேவைப்படும் வேளையில் உடனடியாகவே விலைமனுக்கோரலை சமர்ப்பிக்கத் தவறும் அல்லது ஒப்படைத்தலை தேவைப்படும் வேளையில் வழங்கத் தவறும் அல்லது தரம் குறைந்த பொருட்களை வழங்கும் பதிவு செய்யப்பட்டுள்ள வழங்குநர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்ப்பதற்கு அல்லது வழங்குநர்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுவார்கள்.
09. விண்ணப்பதாரிகள் பின்வரும் உருமாதிரியை பாவிக்கலாம்.
    - (அ) விண்ணப்பித்துள்ள அம்சங்கள் (உருப்படியின் பெயர் மற்றும் உருப்படி இலக்கத்தையும் தயவு செய்து குறிப்பிடவும்)
    - (ஆ) விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் முகவரி.
    - (இ) வியாபாரப் பெயர் மற்றும் முகவரி.
    - (ஈ) தொலைபேசி இலக்கம் / தொலைநகல் இலக்கம்/ மின்னஞ்சல் முகவரி:
    - (உ) உடனடித்தொடர்பு இலக்கம் மற்றும் அலுவலர்.
    - (ஊ) வியாபார பதிவு இலக்கம் மற்றும் திகதி
    - (எ) VAT பதிவு இலக்கம், இருப்பின்.
    - (ஏ) வழங்கப்படும் கடன் வசதிகள் (தொகை மற்றும் காலப்பகுதி)
    - (ஐ) விருப்பத்திற்குரிய பிரதேசம்/ மாவட்டம்
    - (ஒ) 2023ஆம் வருடத்தில் விண்ணப்பதாரியினால் பொருட்கள் வழங்கிய / சேவைகளை வழங்கிய அரசாங்க நிறுவனங்கள் மற்றும் ஏனைய தாபனங்களின் பெயர்கள் (ஆவணச் சான்றுடன்)
    - (ஓ) பதிவுக்கட்டணம் தொடர்பான காசுக்கட்டளை, பணப் பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் தொகை.

### வழங்கல்கள் மற்றும் சேவைகள் வகுதி

i. வழங்கல்கள்:

01. காகிதாதி அம்சங்கள்
1-1. காகிதாதி, 1-2. சி.ஆர். புத்தகங்கள், 1-3. பைல் வகைகள், 1-4 குறிப்பு புத்தகங்கள், 1-5. A4, A3, B4, B5 தாள்கள், 1-6. அனைத்து வகையான கம்கள் மற்றும் அனைத்து வகையான ஒட்டுப் பசைகள், 1-7 அனைத்து வகையான பேனாக்கள், பென்சில்கள் மற்றும் அழிறப்பர்கள், 1-8. நகல்பிரதி மற்றும் தட்டச்சுத் தாள்கள், 1-9. அனைத்து வகையான தபாலுறைகள், 1-10. அனைத்து வகையான பேப்பர் குண்டுசிகள், கிளிப்புக்கள், ஸ்டேப்லர் பின்கள் மற்றும் புள்டோக் கிளிப்புக்கள், 1-11. திரவ அமோனியா, 1-12. பேப்பர் துளையிடும் பஞ்சர்கள், கத்திரிக்கோள், ஸ்டேப்லர்கள் போன்றவை, 1-13. வெள்ளை பலகை மற்றும் டஸ்டர்கள். 1-14 புத்தகம் கட்டலுக்கான துணைப்பாகங்கள்.

02. அலுவலக பொருட்கள்:
(கல்குலேட்டர்கள், தட்டெழுத்து இயந்திரங்கள், புகைப்படபிரதியாக்கல் இயந்திரங்கள், எழுதும் டெஸ்க்குகள், மகி போட்டுக்கள், மேசைகள் போன்றவை)

03. அலுவலக தளபாடம். 3-1. மரப் பொருட்கள். 3-2 உருக்கு. 3-3 பிளாஸ்டிக்.
04. தரவு செயலாக்க உபகரணங்கள், 4-1. கணனிகள், 4-2. அச்சுப்பொறிகள் (Printers), 4-3. கணனி வன்பொருள் (Computer Hardware), 4-4. மென்பொருள் 4-5 டோனர்கள், 4-6 பிரிண்டர் ரிப்பன்கள்.
05. வரைபட அச்சிடல் தாள்கள் அடங்கலாக வரைதல் அலுவலக காகிதாதி, ட்ரக்கிங் தாள்கள் மற்றும் உபகரணங்கள்.
06. பாதுகாப்பு மற்றும் பத்திரத்தன்மை அம்சங்கள்:
6-1 ஊழியர் சீருடை தேவைப்பாடுகள், 06-2. உபகரணங்கள் 06-3 துணைப்பாகங்கள் (மழை அங்கிகள் மற்றும் கம் பூட்ஸ், பத்திரத்தன்மை சப்பாத்துக்கள், பாதுகாப்பு சப்பாத்துக்கள், தலைக்கவசங்கள், கையுறைகள் போன்றவை ………)
07. தீப் பாதுகாப்பு உபகரணங்கள், 07-1. தீ அணைக்கும் கருவிகள், 07-2. ஏனைய துணைப்பாகங்கள்
08. இடி தாங்கிகள், 08-1. இடிதாங்கி உபகரணங்கள், 08-2. இடிதாங்கி துணைப்பாகங்கள்
09. நிர்மாண அம்சங்கள் மற்றும் கட்டிட பொருட்கள்:
09-1. கட்டிட பொருட்கள், 09-2. மணல், 09-3. செங்கற்கள், 09-4. சிறுகற்கள், 09-5. கிறவல், 09-6. கற்தூள் 09-7. மண் 09-8 ABC 09-9 Quarry Muck
10. கதவுப் பூட்டுக்கள். 10-1. பித்தளை பொருத்தல்கள், 10-2 துருப்பிடிக்காத உருக்கு துணைப்பாகங்கள், குழாய்கள் மற்றும் ஏனைய பகுதிகள்.
11. குழாய் இணைப்புக்கள், குழாய்கள் மற்றும் ஏனைய உற்பத்திகள் (பிவிசி)
12. குழாய்கள் மற்றும் குழாய் இணைப்புக்கள். 12-1. M.S. 12-2. G.I. 12-3. வார்ப்பிரும்பு
13. கருவிகள். 13-1. பொறியியல் கருவிகள், 13-2. புத்திரத்தன்மை கருவிகள்.
14. அளவையிடல் மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள்.
15. நிர்மாண இரசாயனங்கள் 15-1 கொன்கிறீட் அட்மிக்சர், 15-2. றப்பிட் ஹார்டின்னேர்ஸ் (விரைவு கடினப்படுத்திகள்) 15-3. நீர் கசிவுத் தடுப்புப் பொருட்கள் மற்றும் ஏனையவைகள்.
16. மேற்பரப்பை நிரப்பும் பொருட்கள். 16-1. பிட்டுமென், 16-2. அஸ்பால்ட். 16-3, கொன்கிறீட் வியரிங் கலவை, 16-4. ஜியோ-டெக்ஸ்டைல்
17. ஒட்டுப்பலகை கதவுகள் மற்றும் சீட்டுக்கள்
18. அலுமினிய கட்டமைப்புகள்
19. வலுவூட்டப்பட்ட உருக்கு. 19-1. QT & TMT Bars 19-2 M.S. Round 19-3 M.S. Coil
20. Structural Steel of all types 20-1. Lip C Purlins, 20-2 H Beam, 20-3. M.S. Plate 20-4, Flat Iron, 20-5. Angle Iron, 20-6. Hollow Sections etc.,……..
21. ஹாட்வெயார் அம்சங்கள்.
22. மரப்பலகை (உள்ளூர் மற்றும் இறக்குமதி செய்யப்பட்டது) 22-1. வகுப்பு-I, 22-2. வகுப்பு II, 22-3. வகுப்பு III.
23. அனைத்து இனங்கள் மற்றும் அளவுகளிலுள்ள போல்டுகள் மற்றும் நட்டுகள்
24. ஒட்சிசன் மற்றும் அசிட்டிலின் வாயுக்கள்
25. சீமெந்து (பாரிய அளவு மற்றும் பைகள்)
26. புளொக்குகள் 26-1, சீமெந்து புளொக்குகள், 26-2. ஹொலொ புளொக்குகள், 26-3. கொன்கிறீட் நடைபாதை புளொக்குகள்.
27. அஸ்பெஸ்டஸ் கூரைத்தகடுகள் மற்றும் சீலிங் தகடுகள் மற்றும் துணைப்பாகங்கள்
28. உலோக கூரைத்தகடுகள் மற்றும் சீலிங் தகடுகள் மற்றும் துணைப்பாகங்கள்
29. Wire Ropes
30. முன்தயாரிக்கப்பட்ட கொன்கிறீட்
31. Welding Electrode, 31-1. Gas Welding Rod, 31-2. வாயு மற்றும் மின்சார உருக்கி ஒட்டுதல் உபகரணம், 31-3. எம். எஸ். 31-4. செம்பு
32. தோட்ட உபகரணம் (உ+ம் தெளிப்பவைகள், புல் வெட்டும் கருவிகள், விசிறியடிக்கும் உபகரணங்கள் போன்றவை ………..)
33. ஓடுகள் (சுவர் ஓடுகள், தரை ஓடுகள், களிமண் ஓடுகள் போன்றவை ………)
34. சுத்திகரிப்பு பொருத்தல்கள்
35. சமையலறை பொருத்தல்கள்
36. கூரை ஓடுகள்
37. நீர் பம்பிகள்
38. பொலிதீன் 38-1. பொலிதீன் உற்பத்திகள். 38-2. பொலிசக் பைகள்
39. கண்ணாடி மற்றும் முகம் பார்க்கும் கண்ணாடிகள் (Mirrors)
40. நீர் தாங்கிகள்
41. சங்கிலித் தொடர் வேலி
42. உயர் அழுத்த உருக்கு கம்பி
43. உயர் அழுத்த நட் மற்றும் போல்ட்
44. போக்குவரத்து சமிக்ஞை விளக்குகள் மற்றும் வீதி சமிக்ஞை விளக்கு அம்சங்கள் (சமிக்ஞை கம்பங்கள், ஆர்ம் கம்பங்கள், சமிக்ஞை கம்பங்கள், இரட்டைக் கம்பங்கள்
45. சிக்னல் ஹெட்கள், 2A சிக்னல் ஹெட், 1A சிக்னல் ஹெட், Count Down, Pathway Light, Man Light.

### மின்னியல் அம்சங்கள் மற்றும் துணைப்பாகங்கள்

46. சுவிச்சுக்கள் மற்றும் சொக்கட்டுகள்.
47. அனைத்து வகையான கேபள்கள் (பிவிசி காப்பிடப்பட்டது)
48. மின்சார விநியோக பலகைகள், பிரதான சுவிட்சுக்கள் மற்றும் துணைப்பாகங்கள்
49. மின்சாரவிளக்கு பொருத்திகள், மின்குமிழ்கள், புளோரெசண்ட் குழாய் மற்றும் ஏனைய மின்சார பொருத்திகள் மற்றும் துணைப்பாகங்கள்
50. இலத்திரனியல் அம்சங்கள் - புகைப்படபிரதியாக்கல் இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், அச்சுப்பொறிகள் (தொலைக்காட்சி, பல்லூடக புரஜெக்டர், சீசீடிவி கெமரா, மின்பிறப்பாக்கிகள், போன்றவை)
51. வளிச்சீராக்கிகள் மற்றும் துணைப்பாகங்கள்
52. மின்விசிறி மற்றும் எக்ஸ்ஹோஸ்ட் முறைமை மற்றும் மின்பிறப்பாக்கிகள்
53. பாதசாரி கொன்ட்ரோல் பெனல், சந்தி கொன்ட்ரோல் பெனல், Combine Controller for Traffic Signal System

### வாகன அம்சங்கள்:

54. உராய்வுநீக்கிகள் மற்றும் ஏனைய உற்பத்திகள் (என்ஜின் எண்ணெய், கிறீஸ், ஹைட்ரோலிக், டீசல், பெற்றோல்)
55. டயர்கள் மற்றும் டியூப்புக்கள் (இலகுரகம்/ கனரகம்)
56. பயணிகள்/ போக்குவரத்து வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள்
57. அனைத்து வகையான பட்டறிகள்

### பொறித்தொகுதி மற்றும் இயந்திராதி

58. நிர்மாணத்திற்கான பொறித்தொகுதி மற்றும் இயந்திராதி, துளையிடுதல் பொறித்தொகுதிகள், பில்டர்ஸ் ஹொயிஸ்ட்கள், சங்கிலி, ஹையிட்ரோலிக் மற்றும் மின்சார துளைப்பான்கள், கொன்கிறீட் பம்பிகள், ராம்மெர்ஸ்கள், வைபிரேட்டர்கள், கொம்பக்ட்டர்கள், பிளாஸ்டர்கள் (Blasters), கொன்கிறீட் கலவைகள் மற்றும் அனைத்து நிர்மாண இயந்திராதிகள்.

### நிறப்பூச்சுகள்:

59. நிறப்பூச்சுகள், 56-1. எனாமல், 56-2. இமல்ஷன், 56-3. ஸ்பிறே பூச்சுகள், 56-4. தின்னர். 56-5. பொலிஷ் சீலிங் கொம்பவுண்ட்ஸ், 56-6. மெட்டல் பிரைமர் போன்றவை …..
60. புட்டி (Putty) / ஸ்கிம் கோட், பில்லர் (Filler) பேஸ்ட்ஸ்.

ii. சேவைகள்:

01. அலுமினிய கட்டுருவாக்க வேலைகள்.
02. உருக்கு கட்டுருவாக்க வேலைகள்
03. வாகனங்களின் தகர வேலைகள் மற்றும் நிறப்பூச்சு வேலைகள்
04. மண் வழங்கல் மற்றும் நிரப்பல்.
05. துளையிடுதல் வேலைகள்
06. கட்டிட நிர்மாணம் உட்பட அனைத்து வகையான சிவில் நிர்மாண வேலைகள்
07. சீமெந்து மற்றும் உருக்கு போன்றவற்றிற்கான போக்குவரத்து
08. முன்தயாரித்த கொன்கிறீட் உற்பத்திகளின் போக்குவரத்து (Pre-stressed மற்றும் வலுவூட்டப்பட்ட கொன்கிறீட் தூண்கள் அடங்கலானவை)
09. எயார் கொம்பிரஸர்ஸ், வைபிரேட்டிங் ரோலர்ஸ் மற்றும் கனரக மண் அகற்றும் இயந்திரங்கள் போன்ற நிர்மாண இயந்திராதிகளை வாடகைக்கு அமர்த்துதல்.
10. டயர்களின் மீள்நிரப்பல்
11. இயந்திராதி, உபகரணம் மற்றும் வாகனங்களுக்கான திருத்தவேலைகள்
12. பல்வகையான இயந்திர பாகங்களை வார்த்தல்.
13. கிராங்ஷாப்ட் கிரைண்டிங், ரிபேசிங், ரிபோரிங், பாகங்களை லையின் போரிங் போன்ற இயந்திராதி வேலைகள்.
14. சிங்கள் பேஷ் மற்றும் திரீ பேஷ் மின்சார மோட்டர்கள், மின்பிறப்பாக்கிகள் மற்றும் மின்சாரத்தினால் இயங்கும் நீரில் அமிழ்ந்தியங்கும் பம்பிகளின் திருத்தவேலைகள்
15. இன்ஜெக்டர்கள் மற்றும் இன்ஜெக்டர் பம்பிகளுக்கான திருத்தவேலைகள்
16. ஓட்டோ மின்னியல் வேலைகள் மற்றும் வளிச்சீராக்கல் இயந்திரங்களின் திருத்தவேலைகள்
17. அச்சடித்தல் வேலைகள்
18. Pre-stressed Beams, Spun Pipes, Hollow Block, Concrete Poles போன்ற அனைத்து வகையான கொன்கிறீட் உற்பத்திகளை மேற்கொள்வதற்கான தொழிலாளர்களை ஆட்சேர்ப்பதற்கான உப-ஒப்பந்தக்காரர்கள்.
19. அனைத்து நிர்மாண வேலைகளுக்கான தேர்ச்சியுள்ள மற்றும் தேர்ச்சியற்ற தொழிலாளர்களை வழங்கல்.
20. விமான சரக்கு உட்பட சுங்கத் தடையகற்றல் வேலைகள்.
21. தனியார் பாதுகாப்பு சேவைகள்
22. புகைப்படபிரதியாக்கல் இயந்திரங்கள், வளிச்சீராக்கல் இயந்திரங்கள் மற்றும் கணனிகளின் திருத்தவேலைகள்
23. வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல் (லொறி/ வேன்/ ஸ்கை லிப்ட் / பூம் டிரக்/ கிரேன் போன்றவை)
24. உள்நாட்டு தூதஞ்சல் (கூரியர்) சேவைகள்
25. வேறு ஏதும் சேவைகள்

**தலைவர்,**
**கூட்டுத்தாபன பெறுகைக் குழு,**
**அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனம்**

**இல.: 7, பொருபன வீதி,**
**இரத்மலான.**
**தொலைபேசி: 0112-607560 / 0112-632146 / 0112-607566**

**"உட்கட்டமைப்பு நிர்மாணத்தின் முன்னோடிகள்"**

## இளையோர் ஆசிய கிண்ணம்

# பங்களாதேஷிடமும் தோற்ற இலங்கை இளையோர் அரையிறுதியை இழந்தனர்

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்று வரும் 19 வயதுக்கு உட்பட்ட ஆசிய கிண்ண போட்டியில் பங்களாதேஷ் அணியுடனான கடைசி குழுநிலை போட்டியிலும் 6 விக்கெட்டுகளால் தோல்வியை சந்தித்த இலங்கை இளையோர் அணி அரையிறுதி வாய்ப்பை இழந்து வெளியேறியது.

டுபாயில் நேற்று நடைபெற்ற பி குழுவுக்கான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை இளையோர் அணி முக்கிய இடைவெளிகளில் விக்கெட்டுகளை பறிகொடுத்தது. எந்த வீரரும் 20களுக்கு மேல் ஓட்டங்களை பெறவில்லை என்பதோடு ஏழு வீரர்கள் தமது ஓட்டங்களை 20கள் வரை எட்டிய நிலையில் விக்கெட்டை தாரைவார்த்தனர். விஷ்வ லஹிரு பெற்ற 25 ஓட்டங்களுமே அதிகமாகும்.

இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த பங்களாதேஷ் இளையோர் அணியின் முதல் விக்கெட்டை ஒரு ஓட்டத்திற்கு வீழ்த்த முடிந்தபோதும் மறுமுனையில் இருந்த ஆரம்ப வீரர் ஆஷிகுர் ரகுமான்



ஷிப்லி ஆபாராமாக துடுப்பெடுத்தாடினார். கடைசி வரை ஆட்டமிழக்காது களத்தில் இருந்த அவர் 130 பந்துகளில் 11 பௌண்டரிகள் மற்றும் இரண்டு சிக்ஸர்களுடன் 116 ஓட்டங்களை பெற்றார்.

இதன்மூலம் பங்களாதேஷ் இளையோர் அணி 4 விக்கெட்டுகளை இழந்து 204 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

இதன்மூலம் சினெத் ஜயவர்தன தலைமையிலான இலங்கை இளையோர் அணி ஆசிய கிண்ணத் தொடரில் ஆடிய மூன்று குழு நிலைப் போட்டிகளில் இரண்டில் தோற்று அரையிறுதி வாய்ப்பை இழந்தது.

முன்னதாக இலங்கை இளையோர் அணி ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு எதிரான போட்டியில் தோற்றதோடு ஜப்பானுக்கு எதிரான ஆட்டத்தில் மாத்திரமே வெற்றியீட்டியது.

இதன்படி நேற்று நடந்த மற்ற பி குழுவுக்கான போட்டியில் 107 ஓட்டங்களால் ஜப்பானை இலகுவாக வீழ்த்திய ஐக்கிய அரபு இராச்சியம், பங்களாதேஷுடன் பி குழுவில் இருந்து அரையிறுதிக்கு முன்னேறியது.

# க்வாஜாவுக்கு ஆஸி. கிரிக்கெட் எச்சரிக்கை



பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் பலஸ்தீனத்திற்கு ஆதரவான செய்தி ஒன்றை தனது பாதணியில் காண்பிப்பதற்கு திட்டமிட்ட அவுஸ்திரேலிய வீரர் உஸ்மான் க்வாஜா எச்சரிக்கப்பட்டுள்ளார்.

க்வாஜா போட்டியின்போது “அனைத்து உயிர்களும் சமமானது” மற்றும் “சுதந்திரம் ஒரு மனித உரிமையாகும்” என்ற வாசகங்களை எழுதிய பாதணியை அணியத் திட்டமிட்டிருந்தார். எனினும் தனிப்பட்ட செய்திகளை தடுக்கும் சர்வதேச விதியை க்வாஜா மதிக்க வேண்டும் என்று அவுஸ்திரேலிய நிர்வாகம் எச்சரித்துள்ளது.

அவுஸ்திரேலிய அணித்தலைவர் பட் கம்மின்ஸ் மற்றும் அந்நாட்டு விளையாட்டுத்துறை அமைச்சர் க்வாஜாவுக்கு ஆதரவை வெளியிட்டபோதும் போட்டியில் அந்த பாதணிகளை அணியும் திட்டத்தை அவர் கைவிட்டுள்ளார்.

முஸ்லிம் வீரரான க்வாஜா பேர்த்தில் இன்று (14) ஆரம்பமாகும் பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டிக்கான பயிற்சியில் பலஸ்தீனத்திற்கு ஆதரவான பாதணிகளை அணிந்திருந்தார். சமூக ஊடகத்திலும் காசா மக்களுக்கு ஆதரவை வெளியிட்டிருந்தார்.

# வர்த்தக சேவை கால்பந்து சங்கத்திற்கு 105 ஆண்டுகள்

*பிரின்ஸ் குணசேகர*



வர்த்தக சேவை கால்பந்து சங்கத்தின் 105 ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டி கோல்பேஸ் ஹோட்டலில் அந்த சங்கத்தின் அங்கத்தவர்களின் பங்கேற்புடன் அண்மையில் நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வர்த்தக சேவை கால்பந்து சங்கத்தின் தலைவர் சாயிப் யூசுப்பின் அழைப்பின் பேரில் சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஸ்கொட்லாந்து கால்பந்து சங்கத்தின் முன்னாள் தலைமை செயலாளர் ஸ்டுவட் மைக்கல் ரேகன் மற்றும் இலங்கை கால்பந்து சம்மேளன தலைவர் ஜஸ்வர் உமர் உட்பட பிரமுகர்கள் பலர் பங்கேற்றிருந்தனர்.

1918 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கையின் மிகப் பழமையான கால்பந்து லீக்காக வர்த்தக சேவை கால்பந்து சங்கம் உள்ளது என்று அதன் தலைவர் யூசுப் இதன்போது தெரிவித்தார்.

# சம்பியனானது குட்நிக் அணி

*ஒலுவில் கிழக்கு தினகரன், மாளிகைக்காடு குறூப் நிருபர்கள்*

விநாயகபுரம் விளையாட்டுக் கழகத்தின் 45 வருட நிறைவினை முன்னிட்டு நடைபெற்ற மின்னொளி உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் குட்நிக் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைந்த இறுதிப் போட்டியில் விநாயகபுரம் மின்னொளி விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்ட குட்நிக் அணி பெனால்டி சூட் அவுட் முறையில் 4–3 என்ற கோல்களால் வெற்றியீட்டியது. போட்டியில் முழு நேர முடிவின்போது இரு அணிகளும் கோல் பெறாத நிலையிலேயே பெனால்டி சூட் அவுட் முறை பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# சர்வதேச செய்திகள்

## டுபாய் காலநிலை மாநாடு:

# புதைபடிவ எரிபொருளில் இருந்து மாற உடன்பாடு



டுபாயில் நடைபெறும் ஐக்கிய நாடுகளின் COP28 காலநிலை மாநாட்டில் காலநிலை மாற்றத்தின் மோசமான பாதிப்பை தவிர்ப்பதற்கு உலக நாடுகள் புதைபடிவ எரிபொருளில் இருந்து மாறுவதற்கு முதல் முறையாக உடன்பாடு ஒன்று எட்டப்பட்டுள்ளது.

சுமார் 200 நாடுகளால் நேற்று (13) ஒப்புதல் அளிக்கப்பட்ட இந்த உடன்பாட்டை COP28 தலைவர் சுல்தான் அல் ஜாபர் வரவேற்றுள்ளார். தொழில் புரட்சிக்கு முந்தைய நிலைக்குள், உலக வெப்பநிலையை 1.5 டிகிரி செல்சியஸுக்கு மட்டுப்படுத்தும் வலுவான திட்டமாக இது உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

“எமது இறுதி உடன்பாட்டில் முதல் முறையாக புதைபடிவ எரிபொருள் என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளோம்” என்று ஐக்கிய அரபு இராச்சியத்தின் அட்னொக் எண்ணெய் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான அல் ஜாபர் தெரிவித்தார். இது இன்னும் மேம்பட்ட, தூய்மையான உலகை உருவாக்க உதவும் என்றும் அவர் கூறினார். புதைபடிவ எரிபொருள் பயன்பாட்டை முடிவுக்குக் கொண்டுவரும் முக்கிய படியாக இது உள்ளது என்று இந்த மாநாட்டில் பங்கேற்ற உலக நாடுகளின் பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர். இதன்படி உலகிலுள்ள அனைத்து நாடுகளும் பெட்ரோல், டீசல், நிலக்கரி, இயற்கை எரிவாயு உள்ளிட்ட புதைபடிவ எரிபொருட்களைப் பயன்படுத்துவதில் இருந்து விலக வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மனித குலம், உலக வெப்ப உயர்வை 1.5 டிகிரி செல்சியஸுக்குள் வைத்திருக்க, விரைந்த, நீடித்த, அர்த்தமுள்ள நடவடிக்கைகள் தேவை என்பதைத் தீர்மான வாசகங்கள் அங்கீகரித்தன. எனினும் 100க்கும் அதிகமான நாடுகள் கோரியது போன்று புதைபடிவ எரிபொருள் பயன்பாட்டை நிறுத்தும் அளவுக்கு இந்த உடன்பாடு இதுவரை செல்லவில்லை. மாறாக, நியாயமான, ஒழுங்கான மற்றும் சமமான முறையில் புதைபடிவ எரிபொருளில் இருந்து மாறும் நடவடிக்கையை விரைவுபடுத்துவதற்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த மாற்றமானது 2050 ஆம் ஆண்டில் பசுமையில்ல வாயு உமிழ்வை பூஜ்ய அளவுக்கு கொண்டுவருவதற்கும் காலநிலை விஞ்ஞானிகளின் பரிந்துரைகளை பின்பற்றுவதற்கு வகை செய்வதாக உள்ளது.

# உறவை மேம்படுத்தும் ஜப்பான்–வியட்நாம்



பிராந்திய பாதுகாப்பு குறித்த பொதுவான விடயங்களில் உறவுகளை மேம்படுத்துவதற்கு ஜப்பான் மற்றும் வியட்நாம் இணக்கம் கண்டுள்ளன.

ஜப்பானிய பிரதமர் புமியோ கிஷிடாவுக்கும் வியட்நாம் ஜனாதிபதி வொ வான் தௌங்வுக்கும் இடையிலான சந்திப்பின் போதே இவ்விணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. இரு நாட்டு தலைவர்களும் சந்தித்து கலந்துரையாடியதைத் தொடர்ந்து ஜப்பானுக்கும் வியட்நாமுக்கும் இடையிலான விரிவான மூலோபாயக் கூட்டாண்மையை அவர்கள் அறிவித்தனர்.

ஜப்பானிய பிரதமர், சுதந்திரமானதும் திறந்ததுமான இந்தோ–பசுபிக் பிராந்தியத்தை அடைவதற்கு வியட்நாம் முக்கிய பங்குதாரராகும் என்று குறிப்பிட்டதோடு உத்தியோகபூர்வ பாதுகாப்பு உதவி என்ற வகையில் புதிய இராணுவ உதவியையும் வியட்நாமுக்கு அவர் வழங்கினார். இரு நாட்டு தலைவர்களும் வர்த்தகம், காலநிலை மாற்றம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் தங்கள் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கு ஒப்புக்கொண்டுள்ளனர் என்று ஜப்பானிய வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள கூட்டறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காசாவில் தொடரும் தாக்குல் இடையே இஸ்ரேல் தனிப்படும் நிலை அதிகரிப்பு

## ஐ.நா. வாக்கு: பைடனும் விமர்சனம்



காசா மீது தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தி வரும் நிலையில் அவசர மனிதாபிமான போர் நிறுத்தம் ஒன்றுக்கு ஐக்கிய நாடுகள் சபை அழுத்தம் கொடுத்திருக்கும் சூழலில் இராஜதந்திர ரீதியில் இஸ்ரேல் தனிமைப்படுத்தப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் மீதான கண்மூடித்தனமான குண்டு வீச்சுகளால் இஸ்ரேல் சர்வதேச அளவில் ஆதரவை இழந்து வருவதாக இஸ்ரேலின் நெருங்கிய கூட்டாளியான அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மற்றும் தெற்கு காசாவில் சமகாலத்தில் உக்கிர போர் இடம்பெற்றுவரும் நிலையில் இஸ்ரேலியப் படை நேற்று இதுவரை இல்லாத அளவில் பெரும் இழப்பை சந்தித்துள்ளது. நேற்றைய உக்கிர மோதல்களில் மூத்த கேணல் ஒருவர் உட்பட பத்து இஸ்ரேலிய படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

காசாவின் ஷெர்ஜையா பகுதியில் பலஸ்தீன போராளிகள் நடத்திய அதிரடி தாக்குதல் ஒன்றில் 44 வயது கேணல் இட்சக் பென்பாசத் கொல்லப்பட்டுள்ளார். கொலாணி படையணியின் தளபதியான இட்சாக் காசா மீதான தரைவழி தாக்குதலை ஆரம்பித்த பின்னர் இஸ்ரேலிய படைகளில் கொல்லப்பட்ட மூத்த உறுப்பினராக உள்ளார். இதே தாக்குதலில் மேலும் ஒன்பது இஸ்ரேலிய துருப்பினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலிய போர் விமானங்கள் காசாவில் தொடர்ந்து குண்டு மழைபொழிந்து வருவதோடு மழையுடனான குளிர் காலம் ஆரம்பிப்பது காசாவில் நிலைமையை மேலும் மோசமடையச் செய்யும் என்று உதவி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே 2.3 மில்லியன் மக்கள் தொகை கொண்ட காசாவில் 85 வீதத்துக்கும் அதிகமானவர்கள் வீடுகளை விட்டு வெளியேறி அடிப்படை வசதிகள் இல்லாத தற்காலிக முகாம்களில் தங்கி வருகின்றனர்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி பலஸ்தீன போராளிகள் இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலில் 1,200 பேர் வரை கொல்லப்பட்டு 240 பேர் வரை பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்ட நிலையில் சர்வதேச அனுதாபத்திற்கு மத்தியிலேயே காசா மீது இஸ்ரேல் போர் நடவடிக்கையை ஆரம்பித்தது. ஆனால் அது தொடக்கம் காசாவில் முழு முற்றுகையை செயற்படுத்திய இஸ்ரேல் அங்கு குடியிருப்புகள், மருத்துவமனைகள் என்று அனைத்து உட்கட்டமைப்புகள் மீது வான், தரை மற்றும் கடல் மார்க்கமாக சரமாரி தாக்குதல்களை நடத்தியது. இந்தத் தாக்குதல்களில் 18,000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்களாவர். தவிர ஆயிரக்கணக்கானவர்கள் கட்டட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

டிசம்பர் ஆரம்பத்தில் ஒரு வாரம் நீடித்த போர் நிறுத்தம் முறிந்ததை அடுத்து இஸ்ரேலியப் படை தனது தரைவழி தாக்குதலை வடக்கு காசாவில் இருந்து தெற்கை நோக்கி விரிவுபடுத்தியதோடு தெற்கின் பிரதான நகரான கான் யூனிஸ் கடும் தாக்குதலுக்கு இலக்காகி வருகிறது.

வடக்கு காசாவில் தனது இலக்குகள் பெரும்பாலும் நிறைவேறி இருப்பதாக இஸ்ரேல் முன்னதாக குறிப்பிட்டபோதும் அங்கு இடிபாடுகளுக்கு மத்தியிலும் தொடர்ந்து உக்கிர மோதல்கள் நீடித்து வருகின்றன.

வடக்கு காசாவில் உள்ள காசா நகரில் ஏற்பட்ட மோதலிலேயே ஒரே தாக்குதலில் பத்து இஸ்ரேலிய துருப்பினர் கொல்லப்பட்டுள்ளனர். இதனால் கடந்த ஒக்டோபர் பிற்பகுதியில் காசாவில் தரைவழி தாக்குதலை ஆரம்பித்தது தொடக்கம் கொல்லப்பட்ட இஸ்ரேலிய வீரர்களின் எண்ணிக்கை 115 ஆக உயர்ந்துள்ளது.

### “காசாவை அடிபணியச் செய்ய முடியாது”

இந்த சம்பவம் இஸ்ரேலால் காசாவை அடிபணியச் செய்ய முடியாது என்பதை காட்டுகிறது என்று ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

“உங்களது தோல்வியுற்ற தலைமை உங்களது வீரர்களின் உயிர்களை பொருட்படுத்தவில்லை என்பதை சியோனிஸ்ட்களுக்கு கூறிக்கொள்கிறோம். தொடர்ந்தும் நீங்கள் அங்கு இருந்தால், உங்கள் உயிர்களுக்கு விலைகொடுக்க வேண்டி இருக்கும் என்பதோடு பெரும் இழப்புகளை சந்திப்பீர்கள். இறைவன் நாடினால் ஏமாற்றம் மற்றும் இழப்பையே சந்திப்பீர்கள்” என்று ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

வடக்கில் ஜபலியா பகுதியில் உக்கிர மோதல் நீடிக்கிறது. அங்குள்ள மருத்துவமனை ஒன்றை இஸ்ரேலிய துருப்புகள் முற்றுகையிட்டிருப்பதாகவும் மருத்துவப்பணியாளர்களை மோசமாக நடத்துவதாகவும் காசா சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தெற்கில் கான் யூனிஸை நோக்கி படையெடுத்திருக்கும் இஸ்ரேலிய துருப்புகள் அண்மைய நாட்களில் முன்னேற்றம் கண்டு அந்த நகரின் மையப் பகுதியை அடைந்துள்ளது. கடுமையான மோதல் நீடித்து வருவதாக அங்குள்ள குடியிருப்பாளர்கள் கூறியுள்ள நிலையில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேலிய துருப்புகளால் முன்னேற முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

“மத்திய காசாவில் இருந்து இஸ்ரேலிய துருப்புகள் மேலும் முன்னேறவில்லை. அவர்கள் கடும் எதிர்ப்பை சந்திப்பதோடு துப்பாக்கிச் சத்தங்கள், வெடிப்புச் சத்தங்கள் கேட்ட வண்ணம் உள்ளன” என்று மத்திய காசாவில் இருந்து 2 கிலோமீற்றருக்கு அப்பால் வசிக்கும் ஐந்து குழந்தைகளின் தந்தையான அபூ அப்தல்லா ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலிய துருப்புகள் புல்டோசர்களையும் எடுத்துச் சென்றிருப்பதோடு ஹமாஸ் தலைவர் யஹ்யா அல் சின்வாரின் கான் யூனிஸ் வீட்டுக்கு அருகில் இருக்கும் வீதிகளை தகர்த்து வருகிறது. “அவர்கள் எங்கு சென்றாலும் எமது நிர்க்கதியான பொதுமக்களுக்கு இழப்பை ஏற்படுத்தி உயிரிழப்புகளையும் அழிவுகளையுமே தந்து வருகிறார்கள்” என்று அபூ அப்துல்லா கூறினார்.

வடக்கு காசாவில் உள்ள வைத்தியசாலைகள் பெரும்பாலும் செயலிழந்துள்ளன. தெற்கில் ஒருசில மருத்துவமனைகள் பகுதி அளவில் இயங்கி வரும் நிலையில் அங்கு காயமடைந்தவர்கள் நிரம்பி வழிகின்றனர்.

“நான் உட்பட்ட மருத்துவர்கள் சிறுவர்களின் உடல்களை மிதித்துக்கொண்டு சென்றே இறந்து வரும் குழந்தைகளுக்கு சிகிச்சை அளித்து வருகிறோம்” என்று கான் யூனிஸில் உள்ள மருத்துவமனையில் தன்னார்வ தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த மருத்துவர் கிறிஸ் ஹுக் தெரிவித்துள்ளார்.

காசாவுக்குக் கிடைக்கும் மட்டுப்படுத்தப்பட்ட உதவிகளை எகிப்து எல்லைக்கு அருகில் உள்ள ரபா பகுதியில் மாத்திரமே விநியோகிக்க முடியுமாக இருப்பதாக சர்வதேச நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. தார்ப் பாய்களின் கீழ் மேலும் ஆயிரக்கணக்கான மக்கள் அடைக்கலம் பெற்றிருப்பும் நிலையில் இந்த வாரமாகும்போது அங்கும் நிலைமை மோசமடைந்து வருகிறது.

ஐ.நா மனிதாபிமான அலுவலகத்திற்கான காசா குழுவின் தலைவரான கெம்மா கொனல் கூறியதாவது, “நேற்று இரவு கடும் மழை மற்றும் காற்று வீசியது. தற்காலிக முகாம்களில் இருக்கும் இந்த மக்கள் பரிதாபத்தை சந்தித்து வருகிறார்கள்” என்றார். இவர் தற்போது ரபாவை தளமாகக் கொண்டு செயற்பட்டு வருகிறார்.

எகிப்து எல்லை ஊடாக உதவிகளை அதிகரிப்பதற்கு எகிப்து ஆதரவளித்து வருகிறது. பொதுமக்கள் வருவதற்கு உதவியாக ரபாவில் நான்கு மணி நேர போர் நிறுத்தம் ஒன்றையும் அது அறிவித்துள்ளது. எனினும் பாதுகாப்பற்ற சூழலில் உதவிகள் செல்வதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

### ஐ.நா வாக்கு

ஐ.நா பாதுகாப்புச் சபையில் அவசர போர் நிறுத்தத்திற்கான தீர்மானத்தின் மீது அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்திய நிலையில், செயற்படுத்துவதற்கு எந்த கடப்பாடும் இல்லாத பொதுச் சபையில் கொண்டுவரப்பட்ட அவசர மனிதாபிமான போர் நிறுத்தம் ஒன்றுக்கான அழைப்புக்கு அதிகப் பெரும்பான்மை நாடுகள் ஆதரவு அளித்துள்ளன.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற வாக்கெடுப்பில் 193 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட பொதுச் சபையில் முக்கால் பங்கு நாடுகள் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்ததோடு அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடன் இணைந்து வெறுமனே எட்டு நாடுகளே எதிராக வாக்களித்தன.

இந்த வாக்கெடுப்புக்கு முன்னதாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட பெரும்பாலான நாடுகள் ஹமாஸுக்கு எதிரான இஸ்ரேலின் போருக்கு ஆதரவாக உள்ளன என்று பைடன் தெரிவித்தார்.

“ஆனால் கண்மூடித்தனமான குண்டுவீச்சுகளை நடத்துவதால் இஸ்ரேல் ஆதரவை இழக்க ஆரம்பித்துள்ளது” என்று வொஷிங்டனில் நன்கொடையாளர் பிரசார நிகழ்ச்சி ஒன்றில் பேசிய பைடன் தெரிவித்தார்.

உளவுத்தகவல்களை பகிரும் இஸ்ரேலின் நெருங்கிய கூட்டாளிகளான கனடா, அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகள் கூட்டாக வெளியிட்ட அறிவிப்பு ஒன்றில், “ஹமாஸை தோற்கடிப்பதன் விலை அனைத்து பலஸ்தீனிய குடிமக்களின் தொடர்ச்சியான துன்பமாக இருக்க முடியாது” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது கடும்போக்கு அரசில் இருந்து மாற வேண்டும் என்றும் சுதந்திர பலஸ்தீன நாடு ஒன்றை மறுக்க முடியாது என்றும் பைடன் கூறியுள்ளார். இது இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா இடையிலான விரிசலை வெளிப்படையாகக் காட்டுவதாக உள்ளது என்று விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

போருக்குப் பின்னரான காசாவின் எதிர்காலம் பற்றிய அமெரிக்காவின் நிலைப்பாட்டை நெதன்யாகு நிராகரித்திருப்பதோடு காசாவை மேற்குலக ஆதரவு பெற்ற பலஸ்தீன அதிகார சபை ஆட்சி புரிய வேண்டும் என்ற அமெரிக்காவின் அழைப்பையும் அவர் எதிர்த்துள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 டிசம்பர் மாதம் 14ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.